

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு


(1992-93)

(பத்தாவது பேரவை)

பத்தொன்பதாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் 27–4–93)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை–600 009


தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	குழு உறுப்பினர்கள்	iii
2.	அறிக்கை	1
3.	இணைப்பு	6—49

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

(பத்தாவது பேரவை)

மனுக்கள் குழு.

(1992–93)

(1992 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15 ஆம் நாள் நியமனம் செய்யப் பெற்றது.)

தலைவர் :

1. திரு. கா. ப. பட்டாபிராமன்.

உறுப்பினர்கள் :

2. திரு. எஸ். ஜெயக்குமார்.
3. திரு. எஸ். அண்ணாமலை.
4. திரு. கே. சிங்காரம்
5. திரு. எஸ். சண்முகநாதன்.
6. டாக்டர் ச. சுந்தர்ராஜ்.
7. திரு. ஆர். முருகையா பாண்டியன்.
8. திரு. சி. ஞானசேகரன்
9. திரு. ஆர். தங்கராசு
10. திரு, எஸ். பீட்டர் அல்போன்ஸ்
11. திரு. எஸ். ஆண்டித் தேவர்.

செயலகம்

திரு. செ. சு. ஞானகிராமன் .. .. .. செயலாளர்.

திரு. டி. சாலமன் ஜெயபால் .. .. .. இணைச் செயலாளர்.

திரு. ஒ. அப்துல் சத்தார் .. .. .. சார்புச் செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

மனுக்கள் குழு.

(1992ஆ93)

பத்தொன்பதாவது அறிக்கை.

பெறுநர் :

மாண்புமிகு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை,
சென்னை-600 009.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பட்ட 1992–93 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழு (பத்தாவது பேரவை) தனது பத்தொன்பதாவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறது.

குழுவின் கூட்டங்கள்.

1992 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் ஏற்கெனவே விளம்பரம் மற்றும் செய்திக் குறிப்புகள் மூலம் திருநெல்வேலி–கட்டபொம்மன், காமராசர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட மனுக்களையும், அவற்றின் மீதான பதிலுரைகளையும் ஆய்வு செய்தற்பொருட்டு, 1992 நவம்பர் திங்கள் 3, 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில், மேற்கண்ட மூன்று மாவட்டத் தலைநகர்களில் குழு கூடுவதென முடிவு செய்து நவம்பர் திங்கள் 3 மற்றும் 4 தேதிகளில் திருநெல்வேலியிலும், விருதுநகரிலும் முறையே கூடி, அந்தந்த மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்தது.

பின்னர், 1992 நவம்பர் திங்கள் 5 ஆம் நாள் மதுரையில், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் குழு கூடியது.

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு. அ. தெய்வ நாயகம் (மதுரை மத்திய தொகுதி), திரு. அ. மார். பரமசிவம் (சோழவந்தான் தொகுதி) திரு. கா. தவசி (ஆண்டிப்பட்டி தொகுதி) ஆகியோரும் பார்வையாளர்களாகக் கலந்துக் கொண்டனர்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மனுக்கள் குழுவை வரவேற்புப் பேசி, கூட்டத்தைத் துவக்கி வைத்தார்.

மதுரை மாவட்டத்திலிருந்து மொத்தம் பெறப்பட்ட 341 மனுக்களில் 197 மனுக்கள் விதிகளுக்குப் புறம்பானதாகவும், தனிநபர் பற்றிய பிரச்சினை குறித்தவையாகவும் இருந்தமையால் நிராகரிக்கப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும் ஏனைய அரசுத்துறை அலுவலர்களிடமிருந்தும் விளக்கம் கேட்டு அனுப்பப்பட்ட 144 மனுக்களில் பொது முக்கியத்துவம் வாய்ந்த 65 மனுக்களைக் குழு தெரிவு செய்து 5–11–1992 ஆம் நாள் மதுரையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் கூட்டத்திற்கு வந்திருந்து சாட்சியமளித்ததோடு, சம்பந்தப்பட்ட அரசுத்துறை அலுவலர்களும் தேரில் வந்து விளக்கமும் அளித்தனர்.

குழு ஆய்வு செய்த 65 மனுக்களையும் அவற்றிற்கான பதிலுரைகளையும் அம்மனுக்கள் மீது குழு செய்த பரிந்துரைகளையும் இணைப்பில் காணலாம்.

1. குழுவின் பரிந்துரைகள்.

குழு ஆய்வு செய்து, பரிந்துரை செய்யப்பட்டனவற்றில் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த சில மனுக்களைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. மனு எண் 2933—ரியலிவே மேம்பாலம் அமைக்கக் கோரி :

மதுரை கோட்ஸ் தொழிற்சாலை அருகே ரியலிவே மேம்பாலம் அமைக்கக்கோரி மதுரை மேற்குத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. எஸ். வி. சண்முகம் அவர்கள் கொடுத்திருந்த மனுவிற்கு, மேற்படி திட்டத்தை உலக வங்கி நிதி உதவி (TRAMP COMPONENTS) மூலம் செயல்படுத்த மாநகராட்சி மாமன்றம் தீர்மானித்திருக்கிறது என்றும், ஆனால் தற்போது இத்திட்டத்தைச் செயல்படுத்த உலக வங்கி நிதி உதவி கிடைக்க வாய்ப்பு இல்லாததால், தமிழ்நாடு அரசு நிதி உதவியுடனும், உரிய ஒப்புதலுடனும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு, நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது என்று மதுரை மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்திருந்தார். மேலும் தனது 26—12—1992 ஆம் நாளிட்ட கடிதத்தில் அரசு நிதி உதவி கிடைத்தால் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மதுரைமாநகரத்தின் முக்கிய இடமான மதுரை கோட்ஸ் தொழிற்சாலை அருகே இரயில் போக்குவரத்து பெருக்கத்தினால் சாலை, போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் நிரம நிலையில் அவதிப்படுவதால் அரசு நிதியுதவியுடன் அங்கே இரயில்வே மேம்பாலம் அமைக்க, விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப் பெறவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

2. மனு எண் 3653—அரிசனக் காலனிக்குப் பொதுப்பாதை வேண்டி:

திருமங்கலம் வட்டம், மேலக்கோட்டை நிராம அரிசனக் காலனிக்குப் பொதுப் பாதை வேண்டி வந்திருந்த மனுவிற்கு, தற்போதுள்ள வண்டிப்பாதை 3.5 மீட்டர் அகலத்தில் உள்ளது எனவும், மேற்கொண்டு அகலப்படுத்தி 300 மீட்டர் தூரத்திற்குப் பாதை அமைக்க 35 சென்ட் பட்டா நிலத்தைக் கட்டாயமாக ஆர்ஜித்து செய்ய, மேலக்கோட்டை ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி, திருமங்கலம் வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், நில ஆர்ஜிதத்திற்கு உரிய செலவுத் தொகையையும் ஈட்டுத் தொகையான ரு. 14,000—த்தையும் ஊராட்சி நிதியிலிருந்து வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தமது கடிதத்தில் தெரிவித் திருந்தார்.

தற்சமயம் கோவில் வழியாகச் சாலை அமைப்பதை காலனி மக்கள் விரும்பவில்லை யாதலாலும் காலனிக்குத் தெற்கு பக்கத்தில் பட்டா நிலங்கள் உள்ளதாலும் பட்டா நிலம் வழியாக பொதுநலன் கருதி 35 குடும்பங்கள் வாழும் மேலக்கோட்டை பாரதி நகர் ஆதி திராவிடர் காலனிக்கு திருமங்கலம் விருதுநகர் பிரதான சாலையிலிருந்து பொதுப்பாதை அமைப்பதற்கு நில ஆர்ஜிதம் செய்வதில் உள்ள இடர்பாடுகளைக் களையும் பணிகள் விரைவில் முடிக்கப்பெற்று சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

3. மனு எண் 3109—ஆதி திராவிட பொதுமக்களுக்கு இலவச வீட்டு மனை வேண்டி:

பெரியகுளம் வட்டம், எ. புதுக்கோட்டை கிராமத்தில் வசிக்கும் 114 ஆதி திராவிடப் பொதுமக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கக் கோரி வந்திருந்த மனுவிற்கு மேற்படி ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக நிலம் வழங்குவதாக ஒப்புதல் அளித்திருந்த ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த நிலச் சொந்தக்காரர் நிலமளிக்க மறுத்துவிட்டதால் தகுதியான நிலங்களைத் தேர்வு செய்ய தனி வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார் என மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் தமது பதிலுரையில் தெரிவித் திருந்தார்.

மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் நேரில் விளக்கமளிக்கையில், முஸ்லீம் ஒருவர் நிலம் கொடுப்பதாகச் சொல்லியிருப்பதால், பேச்சுவார்த்தை நடத்தி முடித்து விடலாம் என்று தெரிவித்திருந்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 10—11—1992தேதிக்குள்ளாக அறிக்கை அளிக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார்.

இதுகுறித்த ஒப்பளிப்பினை விரைவில் முடித்து, ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

4. மனு எண் 3642— உலிமம்பட்டியில் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து:

உலிமம்பட்டியில் ஒர் உரிமையியல் நீதி மன்றம் அமைக்க வேண்டிவந்திருந்த மனு விற்கு, அது குறித்த கருத்துரு ஒன்று உயர்நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ளது என்று அரசு துணைச் செயலாளர், உள் துறை (நீதி மன்றங்கள்) பதிலளித்திருந்தார்.

உயர்நீதிமன்றத்தின் ஆய்வில் இருக்கும் செயற்குறிப்பை விரைவு படுத்தி, உலிம பட்டியில் உரிமையியல் நீதிமன்றம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பெறவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

5. மனு எண் 4322—ஊனமுற்ற மாணவர்களுக்கு அரசு உதவி வேண்டி:

ஊனமுற்ற மாணவர்களுக்கு, அரசு உதவிகள், கல்விச் சலுகைகள் வேண்டி, நாங் காம் வகுப்பில் பயிலும், மதுரை டவுன் துவக்கப்பள்ளி ஊனமுற்ற மாணவர் ஒருவரிட மிருந்து வந்திருந்த மனுவிற்கு, 1987 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கையின்படி, ஊனமுற்ற மாணவர்களுக்கு விடுதிக் கட்டணம் அளித்தல் மற்றும் எழுதுபொருட்கள் வாங்க நிதி உதவி, பிரயாணச் சலுகைக் கட்டணம் அளித்தல் ஆகிய உதவிகள்செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது என்றும் இதற்கான நிதியுதவி சென்னை பள்ளிக் கல்வி இயக்குநரகம் மூலம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும் மண்டல மறு வாழ்வு அலுவலர் தெரிவித்திருந்தார்.

குழுவிற்கு நேரில் விளக்கமளித்த பள்ளிக்கல்வி துணை இயக்குநர், இத்திட்டம் 1987—லிருந்து செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் மத்திய அரசிலிருந்து ரூ. 31 இலட்சம் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் மாநில அரசின் அனுமதி வேண்டி, தலைமைச் செய லகத்தின் கல்வித் துறைக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தமிழக அரசின் அனுமதியை விரைவில் பெற்று, வரையறுக்கப்பட்ட சலுகைகள் குழுவிற்கு உறுதியளித்தபடி 31—12—1992 ஆம் தேதிக்குள் ஊனமுற்ற மாணவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் என்று குழு நம்புகிறது. இது பற்றிய ஓர் அறிக்கை குழுவிற்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பெறவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

20—1—1993 ஆம் நாளன்று நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை,
20—1—1993,
தை 7, ஆங்கீரச,
திருவள்ளுவர் ஆண்டு—2024.

கா. ப. பட்டாபிராமன்,
தலைவர்,
மனுக்கள் குழு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53-188—2


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
1	2930	திரு. எஸ்.வி. சண்முகம், எம்.எல்.ஏ., மதுரை மேற்கு தொகுதி.	மதுரை மாநகராட்சி செல்லூர் பகுதியில் பூங்கா அமைக்க.
		துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
		தற்போது மதுரை மாநகராட்சி பகுதிகளில் புதிய பூங்காக்கள் அமைக்க நடவடிக்கையில் உள்ளது. அதன்படி கீழ்க்கண்ட இடங்களில் பூங்காக்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1. பி. டி. ராஜன் சாலை, 2. ஜம்புரோபுரம், 3. சிங்கராயர் காலனி 4. முனியாண்டிபுரம் 5. எல்லீஸ் நகர். செல்லூர் பகுதிக்காக ஜம்புரோபுரம் பி.டி.ஆர். சாலையில் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. (ஆணையாளர், மதுரை மாநகராட்சி க. எண் இ4/84308/92 நாள் 27—8—1992).	பூங்காக்கள் அமைக்கப்பட்ட பின்னர் குழுவிற்கு அறிக்கை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.
வ. எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
2	2931	திரு.எஸ். வி. சண்முகம், எம்.எல்.ஏ., மதுரை மேற்கு தொகுதி.	சென்னை அண்ணா சிலைக்கு அருகில் கீழே இருப்பதுபோல் மதுரை தேவர்சிலைக்கு அருகே மும்முகப்புகொண்ட சுரங்கப்பாதை அமைக்கக் கோருதல்.
		துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
		மதுரை மாநகராட்சியின் நிதிநிலை சரியில்லாததால் தற்போது மதுரை தேவர் சிலைக்கு அருகே மும்முகப்பு கொண்ட சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை (ஆணையாளர் மதுரை மாநகராட்சி க.எண் இ4/84309/92, நாள் 27— 8— 1992).	துறையின் பதிலுரை படித்துப்பதிவு செய்யப்பெறுகிறது.
வ.எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
3	2932	திரு எஸ். வி. சண்முகம், எம்.எல்.ஏ., மதுரை மேற்குத் தொகுதி.	மதுரை வைகை வடகரையில் மேலத்தோப்பு கீழத்தோப்பு பகுதியில் தடுப்புசுவர் எழுப்பும்பணி முழுமையாக முடிவடையாமல் உள்ளது. முடிவடையாமல் உள்ள சுவரைப் பூர்த்தி செய்து சேதத்தில் இருந்து பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

துறையில் பதிலுரை
(5)

மதுரை மாநகராட்சி எல்லையில் வைகை ஆற்றின் வடகரையில் மேற்குத்தோப்பிற்கும் மேலத் தோப்பிற்கும் இடையே தற்பொழுது கட்டப்பட்டுள்ள தடுப்புச்சுவர்கள் மதுரை மாநகராட்சி மூலம் கட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதுதவிர மீதமுள்ள பகுதிகளுக்கு தடுப்புச்சுவர் கட்டும் உத்தேசம் ஏதும் பொதுப்பணித் துறையிடம் இல்லை என்பதைத் தெரிவிக்கப்படுகிறது. செயற்பொறியாளர் பொ.ப.து. பெரியாறு வைகைக் கோட்டம் மதுரை, க. எண் 377/எம்/வ1/வ.ப./கோ. 29 நாள், 23—9—92.

குழுவின் பரிந்துரை
(6)

மேற்குறிப்பிட்ட இடத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கமுடியும் என்பதை செயற்பொறியாளர் மாநகராட்சி ஆணையர் இருவரும் கலந்து பேசி முன் மொழிவுகளைத் தயார் செய்து அரசுக்கு அனுப்பச் சொல்வதாகவும், இது சம்பந்தமான பதிலை ஒரு மாதத்திற்குள் குழுவிற்குஅனுப்பி வைப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியதை குழு ஏற்றுக் கொண்டு அவ்வாறே பரிந்துரை செய்கிறது.

வ. எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
4	2933	திரு எஸ்.வி. சண்முகம், எம்.எல்.ஏ., மதுரை மேற்கு தொகுதி.	மதுரை கோட்ஸ் தொழிற்சாலை அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.
(5)

மதுரை கோட்ஸ் அருகே இருப்புப்பாதை மேலே ஒரு மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை உலகவங்கி நிதி உதவியுடன் (RAMP COMPONENTS) மூலம் செயல்படுத்த 28—2—1992.ஆம் தேதிய மதுரை மாநகராட்சி மாமன்றம் தீர்மானித்தது. தற்போது இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு உலகவங்கி நிதிஉதவி கிடைக்க வாய்ப்பில்லாததால் தமிழ்நாடு அரசு நிதிஉதவியுடனும் உரிய ஒப்புதலுடனும் இத்திட்டத்தை நிறைவேற்ற மாமன்றம் 9—10—92 ஆம் தேதிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அரசுக்கு 16—10—92 அன்று கடிதம் எழுதப்பட்டுள்ளது. அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்கப்பெற்றால் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

(ஆணையாளர் மதுரை மாநகராட்சி கூ. எண் இ4/96593/92, நாள் 12—10—1992.)

குழுவின் பரிந்துரை
(6)

உடனடியாக இதனை நிறைவேற்றவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
5	4325	24 மனை தெலுங்கு செட்டியார் சமூக உறவின்முறை, மள்ளப்புரம் கிராமம்.	மள்ளப்புரம் கிராமம் ச.எண் 118-ல் மொத்த விஸ்தீரணம் 1.18 ஏக்கரில் அருள்மிகு சாத்தாவுராயன் திருக்கோவில், பவதி அம்மன் திருக்கோயில் காமாட்சியம்மன் திருக்கோயில் விநாயகர் திருக்கோவில் மற்றும் அதற்கு முன்புறமுள்ள காலியிடம்ஆக மொத்தம் 1.18 ஏக்கர் நிலம் உட்பிரிவு செய்து மேற்படி உறவின்முறை பெயரில் பட்டா வழங்கக் கேட்டன்.

வரிசை எண். (1)	மனு எண். (2)	துறையின் பதிலுரை. (5) மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	குழுவின் பரிந்துரை. (6) மனுவின் சுருக்கம். (4)
6	2908	திரு இரா. சங்கரமூர்த்தி, ரோசணாம்பட்டி கிராமம். ஆண்டிப்பட்டி தாலுக்கா.	மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி உட்கடையில் அமைத்துள்ள ரோசனப்பட்டி கிராம வீடில்லாத ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.
(5)

மனுதாரரின் கோரிக்கையின்படி வீடற்ற தகுதியுள்ள 55 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக புல எண்கள் 814/1பி, 814/2, 814/3ஏ ஆக 0.72.5 நிலத்தை நில ஆர்ஜிதம் செய்வதற்கு பெரியகுளம் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் 18—10—1992-ல் 4 (1) முன் மொழிவுகள் அனுப்பியுள்ளார். புலங்களை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரால் பார்வையிடப்பட்டு 30—10—1992-ம் தேதிக்குள் அரசுக்கு பரிந்துரையுடன் நில ஆர்ஜித முன் மொழிவுகள் அனுப்பப்படும்.

(மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மதுரை, க. எண் ந.க. எப். 7/138837/93, நாள் 15—10—1992).

குழுவின் பரிந்துரை.
(6)

55 பேர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கான முன் மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்த கருத்தை குழு ஏற்றுக் கொண்டு அவ்வாறே பரிந்துரை செய்கிறது.

அந்த இடத்தை அதிகாரிகள் பார்வையிட்டு விரைவாக்காலங்களிலும் மற்ற நாட்களிலும் என்ன வசதிகள் செய்துதர முடியுமோ அவற்றைச் செய்துதர வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

பிரஸ்தாப ஸ்தலம் பார்வையிடப்பட்டு மனுதாரர்கள் விசாரணை செய்யப்பட்டனர். மேற்படி புலம் மள்ளப்புரம் கிராமக்கணக்குகளில், ''கோவில் குளம், பள்ளிக்கூடம்'' என்று பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள அருள்மிகு சாத்தாவுராயன் பகவதி மற்றும் காமாட்சி அம்மன் கோவில்கள் சுமார் 0.05.0 ஹெக்டேர் நிலத்தில் மட்டுமே உள்ளன. விநாயகர் கோவில் வேறு புலத்தில் அமைந்துள்ளது. சாத்தாவுராயன்கோவில் கட்டிடத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் பள்ளிக்கூடம் நடைபெற்றுவந்ததாகத் தெரியவருகிறது. இப்புலத்தில் துணை சுகாதாரநிலையம் வண்டிப்பாதை ஆகியவை பெ. துப்பயன்பாட்டிலுள்ளன. மேற்படி புலத்தை மனுதாரர்கள் அனுபவம் செய்துவருவதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. அரசாணை நிலை எண் 41 வருவாய் (எல்) துறை நாள் 20—1—1987-ல் நீர்நிலைப்புறம்போக்குகளில் மாறுதல் செயற் குறிப்புகள் அனுப்படை உள்ளது. தலிப்பட்ட சமுகத்தினருக்கு பட்டா வழங்கினால் இதுவே ஒரு முன் உதாரணமாகி நாளடைவில் இதுபோன்ற ஆக்ரமிப்புகள் பெருக வாய்ப் புண்டாகும். மேலும் பிரஸ்தாப புலத்தில் மனுதாரர்கள் கோரிக்கையை ஏற்கும்பட்சத்தில் இவர்களுக்கும் இதர வகுப்பினருக்கும் சட்டம் ஒழுங்குப்பிரச்சனை ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. எனவே கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (கோட்டாட்சித்தலைவர் உசிலம்பட்டி. க. எண் ந.க. 8542/92-பி, நாள் 2—9—1992.)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
7	3098	திரு. எம். ஆர். கலைஅரசன், வடுகப்பட்டி, பெரியகுளம் வட்டம்.	மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், தாமரைக்குளம் கிராமம் சர்வே எண் 3090/2-ல் 50 ஆதிதிராவிட சலவையாளர்கள் சமூக மக்களுக்கு அரசு வழங்கிய பட்டா இடத்தில் 1992–93 நடப்பு நிதியாண்டில் ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் இலவச குடியிருப்புகள் கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை. (4)	குழுவின் பரிந்துரை. (6)
ஜவஹர் வேலைவாய்ப்புத்திட்டம் 1991–92-ம் ஆண்டு தாமைரைக்குளம் கிராமம் சர்வே எண் 735, 736-1, 373-1, 738-1, 3109/6பி 1ஏ 2ஏ-ல் 20 ஆதிதிராவிடர் நபர்களுக்கு ரூ. 3.34 லட்சம் மதிப்பீட்டில் தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. அரசு விதிகளின் படி இதுவரையிலும் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படாத கிராமங்களுக்கு முன்னுரிமை அளித்து கிராமங்கள்தோறும் செய்து தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவேண்டும் என உள்ளதால் 1992–93-ம் ஆண்டுக்கு மேற்படி கிராமம் தேர்வு செய்ய அரசு விதிகள் அனுமதிக்கப்படவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. (கூடுதல் ஆட்சியர் மற்றும் திட்ட அலுவலர் மதுரை, ந.க. எண் இ1/9828/92, நாள் 6—10—1992.)	துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப்பெறுகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
8	3102	திரு. தி. சுப்பிரமணியம், திருமங்கலம்.	மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் வடகரை கிராமம் புல எண் 252–2ல் 7 ஏக்கர் 1 சென்ட் நிலத்தை நில ஆர்ஜிதம் செய்து 75 ஏழை மருத்துவ தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கக் கேட்டல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் வடகரை, கிராமம் புல எண் 252-2ல் 7 ஏக்கர் 1 சென்ட் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு அனுமதிபெற்று கொடை ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் நில உரிமையாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது நீதிமன்ற தீர்ப்பாணை கிடைத்தவுடன் மனுதாரர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மதுரை ந.க. எண் 39279/82 பி. ந. 1, நாள் 2—9—1992.)	16—11—1992 அன்று மேற்படி ஊரில் உள்ள நத்தம்புறம் போக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்பொருட்டு நேரில் அதிகாரிகள் பார்வையிட்டு ஆவனசெய்வார்கள் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் கூறியதை குழு ஏற்றுக்கொண்டு அவ்வாறே பரிந்துரை செய்கிறது. மேலும் வழக்கினை துரிதமாக முடிவெடுத்தற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	3615	வீடில்லாத ஆதிதிராவிடர் பொதுமக்கள் மற்றும் பிரமலைக் கள்ளர் ஆங்கர்பாளையம், கீழக்கடலூர்.	உத்தமபாளையம் வட்டம் கீழக்கடலூர் உட்கடை ஆங்கர் பாளையம் கிராமத்தில் வீடில்லாத ஆதிதிராவிடர் களுக்கு வீட்டடி கோரல்.

துறையின் பதிலுரை.

(5)

கீழக்கடலூர் உட்கடை ஆங்கர்பாளையம் கிராமத்தில் புல எண் 12832/-ல் (5.49 ஏக்கர்) நிலஆர்ஜித நடவடிக்கை யில் உள்ளது. நிலஆர்ஜித நடவடிக்கை 5ஏ விசாரணை தொடரும்போது நில உரிமையாளர்கள், டபில்யூ.பி 35/85-ன்படி தடையாணை பெற்றுள்ளனர். நில சொந்தக்காரர் வழக்கின் மனு மீதான பத்திவாரி அறிக்கை தயார் செய்து அரசு வழக்கறிஞருக்கு 27—1—1989-ல் அனுப்பப்பட்டுள்ளது. இடைக்கால தடை 1—6—1989ல் உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் பல நினைவூட்டுக்கள் அனுப்பியும் இதுவரை ஆரைவு எதிர்வாதுரை அனுப்பவில்லை. எனவே இதுகுறித்து பெரியகுளம் தனித்தாசில்தாரை அரசு வழக்கறிஞரிடம் அனுப்பி எதிர்வாதுரை பெற்று 30—10—92-ம் தேதிக்குள் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந.க. எண் எப். 7/138837/92, நாள்: 15—10—1992 மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மதுரை.)

குழுவின் பரிந்துரை.

(6)

1989 லிருந்து நிலுவையில் உள்ள இந்த வழக்கை சீக்கிரம் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆதி திராவிடர்நல அலுவலர் கூறியதை குழு ஏற்றுக்கொண்டு அவ்வாறே பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	4046	செயலாளர், விவசாயத்தொழிலாளர் சங்கம், வெள்ளிமலைப் பட்டி, வரிச்சியூர் அஞ்சல்.	வீட்டுமனைப்பட்டா மதுரை வடக்கு வட்டம் இடையப் பட்டி உட்கடை வெள்ளிமலைப்பட்டி கிராம விவசாயத் தொழிலாளர் குடும்பத்தினர் வீட்டுமனைப்பட்டா கேட்டல்.

துறையின் பதிலுரை.

(5)

மதுரை வடக்கு வட்டம் இடையபட்டி உட்கடை வெள்ளி மலைப்பட்டி கிராமம் புல எண் 113 சர்க்கார் தரிவை ஏற்பட்ட தரிசு கல்லாங்குத்து புறம்போக்கு ஆகும். மேற்படி ஸ்தலம் ஒரே சீராக அமையாமல் இடையிடையே பாறையாக உள்ளது. மேற்படி ஸ்தலத்தில் பாறையாக இருப்பதால் நிரந்தரமாகக் குடியிருக்க வீடுகட்டவும் லாயக்கற்றது. மேற்படி ஸ்தலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(வருவாய் கோட்டாட்சியர் மதுரை, க. எண் 13859/92, நாள் 7—9—1992.)

குழுவின் பரிந்துரை.

(6)

மனுதாரர் வரவில்லை துறையின் பதிலுரை பதிவு செய்யப் பெறுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
11	3072	திரு. நம்பி அ, ராஜாராம், நிலையூர்.	திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், நிலையூர் கிராமம் கைத்தறி நகருக்கு 40 அடி சாலை அமைத்துத்தரக் கேட்டல்.

துறையின் பதிலுரை.

(5)

குழுவின் பரிந்துரை.

(6)

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நிலையூர் கிராமத்திலுள்ள கைத்தறி நகரினை 15—10—1992-ம் தேதி ஆணையாளரால் நேரிடையாக பார்வையிடப்பட்டது. கைத்தறி நகரில் பிரச்சனைக்குரிய இடத்தில் 40 அடி ரோட்டுக்கான இடம் வரைபடத்தின்படி ஒதுக்கப்படவில்லை. இக்காலனியில் ஏற்கனவே ஹட்கோ மூலம் அங்கீகரிக்கப்பட்டபடி, மோட்டார் வாகனங்கள் செல்லும் வகையில் அகலமான அருகாமையிலான சாலை அமைப்புகள் இணைப்புச்சாலை அமைப்புகள் ஏற்கனவே உள்ளன. பொதுமக்களுக்கு இக்காலனியில் சாலை வசதி மிகவும் சிறப்பாகவும் வசதியான நிலையிலும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. இவைகளிலிருந்தும் இக்குடியிருப்பின் தென்பகுதியில் சுமார் 110 மீட்டர் தொலைவில் செல்லும் சாலையுடன் இணைக்க வேண்டி கோரிக்கை வரப் பெற்றுள்ளது. கோரிக்கையில் தெரிவிக்கப்படும் மெயின்சாலைக்கும் கைத்தறி நகரின் கீழ்த்திசையில் காலனி எல்லை முடிவதும் இடத்திற்கும் இடையில் ஒரு ஊரணி புறம்போக்கு நிலமும் சுடுகாடும் உள்ளன. நிலையூர் 1 கிராம மக்கள் இந்த சுடுகாட்டையும் சுடுகாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள ஊரணியையும் பல ஆண்டு காலமாக பயன்படுத்தி வருகின்றனர். மேலும் நிலையூர் கிராமமக்கள் கைத்தறி காலனிக்காக ஏற்கனவே உள்ள ஊரணியையும் சுடுகாட்டையும் சாலைக்காக மாற்றப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எனவே கைத்தறி நகரில் ஏற்கனவே சாலைவசதிகள் இணைப்புச் சாலை வசதிகள் போதிய அளவு இருப்பதால் இக்காலனியின் கீழ்த்திசை எல்லையின் கடைசியில் குடியிருந்துவரும் ஐந்துவீடுகளுக்காக ஏற்கனவே உள்ள ஊரணியையும் சுடுகாட்டினையும் மாற்றி அமைக்க வேண்டியதில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மதுரை ந.க. எண் கே12/142147/92, நாள்: 24—9—1992).

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப்பெறுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	3108	திரு. கோ. நா.கா. மாரிமுத்து, மேலக்கோட்டை. ..	சாலை—திருமங்கலம் வட்டம், மேலக்கோட்டையில் இரு ஆலம்பட்டி கிராமத்திற்கு சாலை வசதி கேட்டல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் மேலக்கோட்டையில் இருந்து ஆலம்பட்டி கிராமத்திற்கு நேரடியாக இணைப்பு சாலை அமைப்பதற்கு 3 கி.மீ. தூரம் பட்டா நிலங்கள் இடையூறாக உள்ளன. விவசாயிகள் பட்டா நிலத்தை தானமாகக் கொடுக்க மறுக்கின்றனர். 4.90 ஏக்கர் நிலம் கட்டாயமாக ஆர்ஜிதம் செய்யப்பட்டு ரூ. 2 லட்சம் நஷ்ட ஈட்டுத்தொகை வழங்க வேண்டியுள்ளது. மேலும் 3 கி.மீ. தார்ச்சாலை அமைக்க ரூ 5 லட்சம் தேவைப்படும். மேலக்கோட்டை ஊராட்சியிலோ ஊராட்சி ஒன்றியத்திலோ நிதிவசதி இல்லாததால் இந்தச்சாலை அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். தற்போது மேலக்கோட்டையிலிருந்து ராயப்பாளையம் வழியாகவும் கரிசல்பட்டி வழியாகவும் ஆலம்பட்டிக்கு தார்ரோடுகள் உள்ளன என்ற விபரத்தை தெரிவித்துக் கொள்கிறேன். (மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் மதுரை ந.க. எண் கே 12/142145/92, நாள்: 7—9—92).	15—11—1992 அன்று உதவி ஆட்சியாளர், வட்டாட்சியர், திருமங்கலம் வட்டாரவளர்ச்சி அலுவலர், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் கூட்டாக மேற்படி இடத்தைப் பார்வையிட்டு வண்டிப்பாதைக்கென நிலம் ஆர்ஜிதம் செய்யவேண்டியிருந்ததால் நடவடிக்கை எடுத்து அதற்கான அறிக்கையை குழுவிற்கு அனுப்பிவைப்பார்கள் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் கூறியதை குழு ஏற்றுக் கொண்டு அவ்வாறே பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
13	3560	திரு. எம். குருசாமி, அவனியாபுரம். ..	மதுரை மாவட்டம், அவனியாபுரம் பேரூராட்சி ஆறுமுக நகர் அருகாமையில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட லே அவுட்டில் வீட்டுமனை வாங்கியுள்ள தனிநபர் ஒருவர் மெயின்ரோட்டிற்கு செல்லும் பாதையை அடைத்துள்ளதை திறந்துவிடக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் பரிந்துரை.
(5)	(6)
மதுரை மாவட்டம் அவனியாபுரம் கிராமம் நில அளவை எண் 384/1 திரு டி. ஏ. தேவசகாயம் என்பவருக்கு 34 சென்டு 324 சதுர அடி இடத்தினை 9 மனைப்பிரிவுகளாக பிரித்து 20 அடி பாதை வீட்டு மனைப்பிரிவு வரைபடம்	துறையின் பதிலுரை படித்துப்பதிவு செய்யப்பெறுகிறது.

அவனியாபுரம் பேரூராட்சியில் உத்திரவு எண் நி.மு. 1593/74. நாள் 9—9—1974-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திரு. டி. எ. தேவசகாயம் மேற்கண்ட இடத்தை மனைப் பிரிவு செய்ததை காட்டாமல் மொத்த இடமான 35 சென்டு 324 சதுர அடி இடத்தை 24—9—1975 தேதியில் திரு. எல். பழனியப்பன் என்பவருக்கு கிரையம் செய் துள்ளார். இருவரும் அதேபோல் 27—6—1980-ம் தேதி யன்று திரு. எஸ். டி. ரத்தினம் என்பவருக்கு கிரையம் செய்துள்ளார். திரு. எஸ். டி. ரத்தினம் என்பவர் மேற் படி இடத்தில் அவனியாபுரம் பேரூராட்சி அலுவலக நி.மு. 1593/74 நாள் 19—9—1980 மற்றும் ப.மு.க.வி. எண் 135/82/83 நாள் 30—1—1982-ன் படி கட்டிடம் கட்ட அனுமதி பெற்று 3725 சதுரஅடி பரப்பளவில் கட்டிடம் கட்ட அவருடைய மகன் திரு. விஜயகுமார் 10 குதிரைதிறன் கொண்ட சைக்கிள் ஸ்டான்டு மற்றும் கேரியர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நடத்தி வரு கிறார். தற்போது பாதை அமைக்க வேண்டுமானால் கட்டிடத்தை இடிக்க நேரிடும். கட்டிட உரிமையாளர் ரூ. 8.00 இலட்சம் நஷ்டஈடு தரவேண்டுமென கோரி யுள்ளார். இடம் சம்பந்தமாக மதுரை மாவட்ட ஆட்சி யாளர் அவர்களின் ந.க.எண் 234033/87, நாள் 25-5-88ல் தற்போது மாநகராட்சி குடியிருப்பு சாலையும் குடிசை மாற்றுவாரிய சாலையும் ஆறுமுக நகருக்கு அணுகுபாதை யாக உபயோகித்து வரவும் 1930ம் ஆண்டு தமிழ்நாடு நிலஅளவு மற்றும் எல்லை குறை குறித்த சட்ட விதிகளுக்கு உட்பட்டு செயல்பட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. (மாவட்டஆட்சித்தலைவர், மதுரை ந.க.எண் 138837/92 எப் 7, நாள் 15—10—1992.)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
14	3619	திரு எம். நடராஜன், கொ.ச. மீனாட்சிபுரம், சித்தாலங்குடி.	சி. புதூர்—மீனாட்சிபுரம் சாலை அமைத்தல் சம்பந்தமாக நில உரிமையாளருக்கு நஷ்டஈட்டுத்தொகை வழங்கக் கேட்டல்.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	குழுவின் பரிந்துரை.
(1)	(2)	(3)	(4)
15	3653	திரு. எ. பரமானந்தம், மேலக்கோட்டை, திருமங்கலம்.	அரிசன காலனிக்கு பொதுப்பாதை வேண்டுதல்.

துறையின் பதிலுரை.

(5)

பொது காலனிக்கு வண்டிப்பாதை 3.5 மீட்டர் அகலத்திற்கு செல்கிறது. மேற்கொண்டு அகலப்படுத்தி 300 மீட்டர் தூரத்திற்கு பாதை அமைக்க 34 சென்ட் பட்டா நிலத்தை கட்டாயமாக ஆர்ஜிதம் செய்ய மேலக்கோட்டை ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி திருமங்கலம் தாசில்தாருக்கு அனுப்பப்பட்டுள்ளது நில ஆர்ஜிதத்திற்குரிய செலவினையும் ஈட்டுத்தொகை ரூ. 14,000-த்தையும் ஊராட்சி நிதியிலிருந்து வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மாவட்ட ஆட்சித் தலைவர் மதுரை, ந.க. எண் கே. 19/142148/92, நாள் 24—9—1992).

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை ஏற்றுக்கொள்ளப்பட்டு விரைவில் பணிகள் முடிக்கப்பெறவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	குழுவின் பரிந்துரை.
(1)	(2)	(3)	(4)
16	3654	திரு. ஆ. ராமசாமி, மேலக்கோட்டை, திருமங்கலம்.	நில உரிமையாளர்களுக்கு வழங்கவேண்டிய நஷ்டஈட்டுத் தொகைக்கு விரைவில் ஒப்புதலளித்து அவர்களுக்கு வழங்க வகை செய்யுமாறு குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை.

(5)

சி. புதூர்—மீனாட்சிபுரம் இணைப்புச் சாலை அமைக்க நில உரிமையாளர்களுக்கு நஷ்டஈட்டுத் தொகை ரூ. 1,47,180 அனுமதிக்கக்கோரி அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. (ஊரக வளர்ச்சித் துறை க. எண் 90276/89 சி2/நாள், 7—10—91) அரசு உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈட்டுத்தொகை வழங்கப்பட்டு இணைப்புச் சாலை அமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் மதுரை, ந. க. எண் 139002/92/கே12, நாள் 19—8—1992).

மனுவின் சுருக்கம்.

(4)

மனுதாரர் தனது நிலத்தை அரசு சாலை அமைக்க கையகப்படுத்தியதாகவும், அதற்கான நஷ்டஈட்டுத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்றும், அதை விரைவில் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
16	4029	திரு. கே. ராமசாமி, ரத்தினபுரம்.	ரத்தினபுரம் ரோட்டிலுள்ள நடைபாதை ஆக்கிரமிப்பை அகற்றித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை.
(5)

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சொக்கலிங்கத்தின் என்ற இடம் அரசு புறம்போக்கு இடமாகும். இந்த பாதை தெருவாகாது மற்றும் விளையாடுமிடம் அமைக்க மாநகராட்சி பராதீனம் கே. 13/12702/52-ல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள இடத்தில் வணிக வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இந்த சொக்க லிங்கத்தின் ஊரணியை ஒட்டி கிழக்கிலும் தெற்கிலும் சாலை உபயோகத்தில் இருந்தது. தெற்குபுறம் சாலை அமைக்க மாநகராட்சி 1979-ல் முயற்சித்தபொழுது திருமதி யோகமணி அம்மாள் (க. எண் 38, 29) என்பவர் சாலை அமைப்பதை ஆட்சேபித்து வழக்கு தொடர்ந்ததின் பேரில் மேற்படி சாலை தனியார் இடத்தில் அமைக்கும்பணி கைவிடப்பட்டது. பின்னர் மேற்படி இடம் தனியார் இடமாதலால் ரிசர்வேசன் படி மேற்படி சாலை சந்து வடபுறம் வளைத்து ஊரணி இடத்தில் உத்தேசித்து காட்டப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிடப்பட்டது தனியார் இடமாகும். இதில் அனுமதியின்றி கட்டுமானம்செய்ததற்குமாநகராட்சிச்சட்டப்படி நோட்டீஸ் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது (ஆணையர் மதுரை மாநகராட்சி க. எண் இ4/96593/92, நாள் 28—9—1992).

மனுவீன் சுருக்கம்.

(4)

மாற்றுப்பாதை இரண்டு வாரத்திற்குள் அமைக்கப்பட்டு ஆணையாளர் குழுவிற்கு அறிக்கை அனுப்பி வைக்கவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

குழுவின் பரிந்துரை.
(6)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
17	3070	திரு அல்லாபிச்சை புதுப்பட்டி விவசாயிகள், உத்தமபாளையம் வட்டம்.	புதுப்பட்டியிலிருந்து மேற்குநோக்கிப் போகும் நெற்றி வழிப்பாதையையும் கம்பம், உத்தமபுரம், வடக்குப்பட்டி யிலிருந்து மேற்கு நோக்கிபோகும் மஞ்ச நாயக்கன்பட்டி ஊற்றுப்பாதையையும் இணைக்கும் பாதையாக உள்ள ஐந்துவாரை மரத்துப்பாதையிலுள்ள ஆக்கிரமிப்புகளை காலி செய்து பஞ்சாயத்து யூனியன் ரோடு அமைத்து பராமரிப்பு செய்ய வேண்டல்.

துறையின் பதிலுரை.
(5)

பிரஸ்தாப வண்டிப்பாதை உத்தமபுரம் கிராமத்தில் க. எண் 1099ல் ஆரம்பித்து ச. எண் 1102, 1123/1, 1124/6, 1128,1560, 1527/1 வழியாகச் சென்று கொண்டிருக்கிறது மேற்படி ச. எண்களில் ச. எண் 1123/1 (வண்டிப்பாதை புறம்புகல்) ச. எண் 1124/6 (வண்டிப்பாதை புறம்புகல்) ஆகியவைகளில் மட்டும் ஆக்கிரமிப்புகள் இருந்தன. இந்த ஆக்கிரமிப்புகள் அனைத்தும் தற்போது காலி செய்யப் பட்டுவிட்டன. மேலும் இந்த வண்டிப்பாதை ச. எண் 1126/1 (ஓடைப் புறம்புகல்) வழியாகவும் செல்கிறது. ஓடை மிகவும் பள்ளமாக உள்ளது. சிறிய பாலம் கட்டினால் வண்டி, வாகனங்கள் செல்ல ஏதுவாக இருக்கும்

குழுவின் பரிந்துரை.
(6)

ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின்றன என்று மாவட்ட ஆட்சித்தலைவர் கூறி, மீண்டும் நேரடி பார்வையிட்டு இரண்டு வாரங்களில் ஆய்வறிக்கையை அனுப்புவதாகக்கூறியதை குழு ஏற்றுக்கொண்டு அவ் வாறே பரிந்துரை செய்கிறது.

ச. எண் 1560 (வண்டிப்பாதை புறம்புகள்) குறுக்கே கோசேந்திரஓடை செல்கிறது. இங்கும் சிறிய பாலம் கட்ட வேண்டியுள்ளது. மழை காலங்களில் இந்த ஓடையில் மழை தண்ணீர் அதிகமாக செல்லும்போது வாகனங்கள் செல்ல இயலாது. இந்த வண்டிப்பாதையில் பாலம் மற்றும் ரோடு அமைப்பது தொடர்பாக கும்பம் பஞ்சாயத்து யூனியன் ஆணையர் தான் மதிப்பீடு பட்டியல் தயார் செய்து நிதிஒதுக்கீடு பெற்றவுடன் சாலை மற்றும் பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார். (சார் ஆட்சியர் பெரியகுளம் ந.க. எண் 12106/92 அ6. நாள் 16—9—1992).

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
18	3367	திரு. எம். முத்து, வலையங்குளம்.	வலையங்குளம் கிராமம் மேல்நிலைத் தொட்டி மோட்டார் பொருத்தி தண்ணீர் கஷ்டத்தை நீக்க கேட்டல்.

துறையின் பதிலுரை.

(5)

(6)

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் வலையங்குளம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற தட்டிட திற்கு எதிரேயுள்ள பிரதான மேல்நிலைத்தொட்டி மோட்டார் தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதுதவிர ஒன்பது அடிகுழாய்களும் அமைக்கப்பட்டு போதியஅளவு குடிநீர்வசதி அளிக்கப்பட்டு வருகிறது. ஊராட்சிக் கட்டடத்திற்கு எதிரேயுள்ள பள்ளிக் கூடத் தோட்டத்தில் உள்ள மோட்டார் கண்டம் செய்யப்பட்டு புதிய மோட்டார் பொருத்தப்பட்டு தண்ணீர் பிரச்சினை தற்போது நீக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித்தலைவர் மதுரை, ந.க. எண் 14854 3/92, கியூஎம்/12 நாள் 14—9—1992).

17

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
19	3617	திரு எம். எஸ். அழகர்சாமி, முனியாண்டிபுரம், பசுமலை அஞ்சல்.	மதுரை தெற்கு வட்டம், திருப்பரங்குன்றம் கிராமம் புல எண் 58/1 மற்றும் 58/2ஏல் உள்ள மயானம் தகரக் கொட்டகை மின் விளக்கு மற்றும் குடிநீர் வசதி செய்து தரக் கேட்டல்.

துறையின் பதிலுரை.
(5)

மனுதாரரின் கோரிக்கையின்பேரில் மேற்படி மயானத்திற்கு திருப்பரங்குன்றம் பேரூராட்சி செயல் அலுவலரால் தகர கொட்டகை அக்ரோ திட்டத்தின்கீழ் போடப்பட்டு விட்டது. மின்விளக்கு அமைப்பது தொடர்பாக 13—10—1992-ம் தேதியன்று திருப்பரங்குன்றம் பேரூராட்சிமன்றக் கூட்டத்தில் அங்கீகரித்து தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது என்றும் தீர்மானத்தின் அடிப்படை யில் மின் இலாகா உதவி கோட்டப் பொறியாளர் பச மலைக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது என்று திருப்பரங்குன்றம் பேரூராட்சி நிர்வாக அலுவலர் தனது 19—10—1992-ம் தேதியிட்ட கடிதம் ந.க. எண் 629/92-ல் அறிக்கை செய்துள்ளார். இப்பணி 31—12—92ம் தேதிக்குள் முடிக்கப்பட்டுவிடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த மயானம் தகரை விட்டு நீண்ட தூரத் தில் அமைந்துள்ளதால் குறாய் விரிவுபடுத்த இயலாது என்றும் மேற்படி கடிதத்தில் அறிக்கை செய்யப்பட் டுள்ளது. பேரூராட்சியிலும் போதுமான நிதிவசதி இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வருவாய் கோட்டாட்சியர் மதுரை க. எண் 11401/92/அ4/ நாள் 21—8—1992).

குழுவின் பரிந்துரை.
(6)

துறையின் பதிலுரை படித்துப்பதிவு செய்யப் பெறுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
20	3729	அரிசன பொதுமக்கள், காந்திநகர் காலனி, மேலவளவு கிராமம், மேலூர் வட்டம்.	குடிநீர்வசதி, பள்ளிக்கூடம், சத்துணவுக்கூடம், தெருவிளக்கு, மற்றும் மயானப்பாதை அமைத்து தரக்கோரல்.

துறையின் பதிலுரை.
(5)

மயானத்திற்கு பாதை வசதி தவிர மற்ற வசதிகள் அனைத் தும் தற்போது காலனியில் உள்ளன. மயானத்தைப் பொறுத்த அளவில் ஆதிராவிடர் மயானம் புலஎண் 317 (பொது மயானமாக) ஒரு கி. மீ. தூரத்தில் உள்ளது. மேற்படி மயானத்திற்கு புல எண் 310/8, 310/9பி, 9இ, 15 புல எண் 242, 241/2, 315 (ஓடைப் புறம்போக்கு) வழியாக பிணத்தை எடுத்துச்செல்கின்றனர். காலவியில் செல்லும் மயானப்பாதை நீர்ப்பிடிப்பு பாதையாகவும் ஒரே சீராக இல்லாமலும் பள்ளமாக உள்ளது. எனவே ஆதிதிராவிடர் நத்தத்தையொட்டி 2 பர்லாங் தூரத்தில் உள்ள புல எண் 270/6ஏ, (0.05.5) 270/6பி (0.09.0) புஞ்சை நிலங்களை மயானத்திற்காக ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 31—10—1992-ம் தேதிக்குள் அரசுக்கு 4 (1) முன் மொழிவுகள் அனுப்பப் படும் (மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், மதுரை க. எண் ந.க. ஆதி 7/144797/92 நாள், 1—9—1992.)

குழுவின் பரிந்துரை.
(6)

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப்பெறுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
21	3087	பொதுச் செயலாளர், தமிழ்நாடு மாநில மலைவேடன் சங்கம், மாடக்குளம், மதுரை.	மதுரை திண்டுக்கல் மாவட்டம் உள்ள பழங்குடியினர் மற்றும், மலைவேடன் சாதி, நிரந்தரச் சாதிச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக.

துறையின் பதிலுரை.

(5)

குழுவின் பரிந்துரை.

(6)

மதுரை வருவாய் கோட்டத்தில் உள்ள மதுரை தெற்கு, மதுரை வடக்கு, வாடிப்பட்டி மற்றும் மேலூர் வட்ட கிராமங்களில் மலைவேடன் என்று நிரந்தர சாதிச் சான்றிதழ் வழங்கக் கோரும் மனுக்கள் வரப் பெற்றுள்ளன. இம்மனுக்கள் மீது கோட்டாட்சியர் அவர்களால் கிராமங்களிலேயே பொதுமக்களின் முன்னிலையில் விசாரணைகள் மேற்கொண்டு அவர்களின் பூர்விகம் அறியப் பெற்றபின் சான்று வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மொத்தம் 21 மனுக்கள் வரப்பெற்றவை.

சாதிச் சான்று வழங்கப்பட்டவை	8
விசாரணையில் உள்ளது	13
நிலுவை	13

நிலுவையில் உள்ள கோப்புகள் அனைத்து மனுக்கள் மீதும் விரைவில் முடிவு எடுக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(வருவாய் கோட்டாட்சியர், மதுரை கடித எண். 13866/92/பி7, நாள் : 1-9-1992.)

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப் பெறுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	3808	திரு. கே. கருணாநிதி, சோளம்பட்டி, கள்ளிக்குடி அஞ்சல்.	1. இலவச பஸ் பாஸ் கோருதல். 2. ஊனமுற்றவர்களுக்கு வழங்கும் உபகரணங்கள் கிடைக்கப் பெறுதல். 3. அடையாள அட்டை பெற்று ஊனமுற்றவர்களுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி பென்ஷன் வழங்குதல். 4. வேலைவாய்ப்புக்கு தகுதியுள்ள ஊனமுற்றவர்களுக்கு அவசியம் வேலைவாய்ப்பு வழங்குதல். 5. ஊனமுற்றோர் சுயத்தொழில் மேற்கொள்ள அரசு மானியத்துடன்கூடன் உதவி.

20 வயது வரை உள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கும் காது கேளாதவர்களுக்கும் மனவளர்ச்சி குன்றியவர் மற்றும் அவர் தம் உதவியாளர்களுக்கும் மருத்துவ மனை/பள்ளி: பயிற்சி நிலையம்/கல்லூரி பணியிடம் மற்றும் அனைத்து இடங்களுக்கு செல்லுவர அரசு ஆணை (நிலை) எண். 2403, போக்குவரத்துறை நாள்: 20-8-1991-ன்படி இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டு வருகிறது. மற்றஊனமுற்ற வர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்க அரசிடமிருந்து ஆணை வரப்பெறவில்லை.

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப்பெறுகிறது.

2. மூன்று சக்கர வண்டிகள் மற்றும் சக்கர நாற்காலிகள் மற்றும் காது கேட்கும் கருவிகள் தகுதியான நபர்களுக்கு வழங்க பின்வரும் குழுவின் தேர்வு செய்யப்பட்டு அதன்படி வழங்கப்பட்டு வருகிறது:

1. மாவட்ட ஆட்சித் தலைவர். மதுரை .. தலைவர்.

2. மண்டல மறுவாழ்வு அலுவலர். மதுரை ....

3. உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மதுரை,

4. தலைமை முடநீக்கியியல் மருத்துவ நிபுணர், மூன்று சக்கர வண்டி மற்றும் அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரை, சக்கர நாற்காலி.

5. காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர், அரசு இராஜாஜி மருத்துவ மனை, மதுரை. காதொலிக் கருவிகள்,

எனவே இதில் முறைகேடு எதுவும் இல்லை என்றும் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது. இதன்படி 1990—91-ல் 60 நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டு உள்ளது. 1991—92-ல் நிதியாண்டில் இத்தகைய முகாம் கல்விக்குடி பஞ்சாயத்து ஒன்றியத்தில் நடத்தப்பட்டது. அதில் பயன் பெற்ற நபர்களின் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

3. அடையாள அட்டை பெற்றுள்ள ஊனமுற்றவர்களுக்கு எவ்வித நிபந்தனை யின்றிப்பென்ஷன் வழங்கக் கேட்டது தொடர்பாக. இத்திட்டம் வருவாய்த் துறையினைச் சார்ந்தது. ஆனால் வருவாய்த் துறை வட்டாட்சியிட மிருந்து அடையாள அட்டை பெற்றுள்ள ஊனமுற்றவர்களுக்கு பென்ஷன் வழங்க அரசிடமிருந்து ஆணை வரப் பெறாததால் பரிசீலனை செய்ய முடியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

4. ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்புக்குத் தேவையான தகுதிகள் இருந்தால். அவசியம் வேலைவாய்ப்பு தர வேண்டும் எனறு கேட்டது தொடர்பாக. ஏற்கனவே அரசாணை எண். 602, சமூகநலத் துறை நாள்: 14-8-1981-ன் படி 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு அடிப்படையிலும் பணி மூப்பு அடிப்படையிலும். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் வேலை வாய்ப்பு தர பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

20

5. வனமுற்றோர் தொழில் செய்து பிழைப்பு நடத்த அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் கேட்டது தொடர்பாக. ஏற்கனவே திட்டம் மாநில அரசால் அமல்படுத்தப்பட்டு வருகிறது, மேலும் இத்திட்டத்தின் கீழ் இவ்வலுவலகத்தின் மூலம் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு இவ் வலுவலகத்தின் மூலம் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்து அனுப்பப்படும், மேலும் அவ்வாறு பரிந்துரை செய்து அனுப்பப்படும் விண்ணப்பங்களை உரிய வங்கிக் கிளை மேலாளர் ஏற்று கடன் உதவி வழங்கிய நபர்களுக்கு மானியத் தொகை வழங்கப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ் 1991—92 நிதியாண்டின் கீழ். மதுரை மாவட்டத்திற்கு ரூ. 33,000 மானியத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதன்படி அந்நிதி யாண்டில் இத்திட்டத்தில் 38 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். 1992—93-ம் நிதியாண்டிற்கு ரூ. 33,000 மானியத் தொகையாக ஒதுக்கீடு செய்து வரப் பெற்றது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மண்டல மறுவாழ்வு அலுவலர், மதுரை, கடித எண் 2960/அ4/92 நாள் 1—9—1992,)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம், (4)
(1)	(2)		
23	3109	திரு. வி. நாகப்பன், த/பெ. வீரண்ணன் (பொதுமக்கள் சார்பாக) 27-3 தெப்பிண்ட் தேவியர் தெரு தென்கரை. பெரியகுளம், மதுரை மாவட்டம்.	பெரிய குளம் வட்டம், எ.புதுக்கோட்டை கிராமம் ச.எண். 70, 71-ல் உள்ள புஞ்சை நிலத்தில் 114 வீடு ஏழை ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கேட்டு மனு.

துறையின் பதிலுரை. (5)

குழுவின் பரிந்துரை. (6)

மனுதாரர் தன்னுடைய கோரிக்கையில் பெரிய குளம் டவுன், தென்கரை, பட்டாளம்மன் கோவில் தெருவில் வசிக்கும் 114 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பம் கொடுத்துள்ளார். மேலும் வீட்டுமனைக்கு நிலத்தைக் கொடுக்க ம. காமுத் தாயி என்பவர் சம்மதித்துள்ளார். இது தொடர்பாக இ. புதுக்கோட்டைகிராமத்தில் விசாரணை செய்யப்பட்டது. நில சொந்தக்காரர் காமுத்தாயி என்பவரும் விசாரணை செய்யப்பட்டார். நில உரிமையாளர் தாழ்த்தப்பட்ட பள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர். அவர் தன்னுடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்ய சம்மதிக்க மறுத்து விட்டார். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்ப தால் சம்மதமின்றி ஆர்ஜிதம் செய்வது இயலாது. இ. புதுக்கோட்டை கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக் காக கீழ்க்கண்டவாறு ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப் பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது. ச. எண். 32, 34/2, 35/12, 16/2, 11, 73, 75/1 ஆக 11.15.0 ஹெக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு சுமார் 500-க்கு மேற் பட்ட ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. தற்போது வீட்டுமனை கோரியுள்ள 114 ஆதிதிராவிடர்களிடம் பெரியகுளம் நகராட்சிக்குட் பட்ட வெவ்வேறு இடங்களில் வாடகை வீட்டில்

10-11-1992-க்குள் பேச்சு வார்த்தை நடத்தி நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலை வர் கூறியதை குழு ஏற்றுக் கொண்டு, அவ்வாறே பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை.
(5)

வசிக்கின்றனர். நகர எல்லைக்குள் உட்பட்ட நிலம் அதிக விலையுடையதாய் இருப்பதாலும், விண்ணப் பத்தில் குறிப்பிட்ட நில சொந்தக்காரர் காமுத்தாய் என்பவர் ஆதிதிராவிடர் ஆக இருப்பதாலும் அவர் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு சம்மதிக்க மறுப்ப தாலும் பயனாளிகள் குடியிருக்க அவர்களது சம்மதத் துடன், தகுதியான நிலங்களை தேர்வு செய்ய தனி வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். கோரிக் கையாளர் நாகப்பன் என்பவருக்கும் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், மதுரை.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
24	3347	திரு. வி. பாலகிருஷ்ணன், தலைவர், அமுதசுரபி கலை மன்றம், 37, தெற்குவெளி வீதி, மதுரை.	மதுரையில் மீனாட்சி தியேட்டர், அமிர்தம் தியேட்டர் சந்தை எதிர் நோக்கியுள்ள தெற்குவெளி வீதியில் போக்குவரத்து இடைஞ்சல் அதிகம் ஏற்பட் டுள்ளது என்றும், அப்பகுதியில் 3 தியேட்டர்கள் இருப்ப தால் சிலமா தியேட்டர் நடந்தும், சைக்கிள், கார், ஆகியவைகளில் அவ்விடத்திற்கு வருவோர் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் எம்.கே.புரம், கப்பிரமணியபுரம், ஜெய்ஹிந்துபுரம், சோலை அழகுபுரம், செல்பவர்களும் இப்பாதை யில் செல்வதாலும் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டுள்ளது என்றும் இதைத்தவிர தெற்குவெளிவீதி, பாண்டிய வேளாளர் தெரு, மீனாட்சி தியேட்டர் சந்து ஆகிய மூன்று இடங்கள் சந்திக்கும் இடத்தில் பெரிய போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுகிறது என்றும், இதைத் தவிர்க்க மீனாட்சி டாக்கீஸ் சந்து, தெற்குவெளிவீதி, பாண்டிய வேளாளர் சந்து சந்திக்கும் இடத்தில் ஒரு போக்குவரத்து மையம் அமைத்தால் போக்குவரத்தின் இடைஞ்சல் தவிர்க்க——வேண்டி..

துறையின் பதிலுரை.
(5)

குழுவின் பரிந்துரை.
(6)

மனுதாரர் குறிப்பிட்ட தெற்குவெளிவீதி ஒரு பிரதான சாலை, அச்சாலையில் அனைத்து வி.ஐ.பிக்களும் செல்லும் முக்கிய சாலையாகும். மீனாட்சி தியேட்டர் பாதையானது ஒன்று முத்துப்பிள்ளை சந்து மிகவும் குறுகிய பாதையாகும். இவ்விடத்தில் எப்போதும் போக்குவரத்து இடைஞ்சலை தவிர்க்க போக்குவரத்து காவலர்கள் நியமிக்கப்பட்டு, இடைஞ்சலை தவிர்க்கப் படுகிறது. மேலும் பாண்டிய வேளாளர் எதிர்புறம் உள்ள மீனாட்சி தியேட்டர் செல்லும் பாதைக்கும் இடைவெளி 75 அடியும், மேற்படி வேளாளர் தெருவிற்கு மீனாட்சி தியேட்டர் அவசர கேட்டிற்கும் இடை வெளி 25 அடியும் வெவ்வேறு இடத்தில் சந்திக்கிறது. இருப்பினும், மதுதாரர் கூறியது போல் வெவ்வேறு இடங்களில் தனித்தனியாக ரோடுகள் தெற்குவெளி வீதியில் சந்திப்பதாலும், அவ்விடத்தில் போக்குவரத்து குடை அமைக்க இயலாது என்றும் மேலும் நெரிசலை தவிர்க்க அதிகப்படியான போக்குவரத்து காவலர்களை

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப்படுகிறது.

நியமித்து நெரிசலை தவிர்க்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டது போல் மேற்படி இடத்தில் குடை அமைக்க தனியார் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

(காவல் ஆணையாளர், மதுரை நகர், மதுரை-1, ந.க. எண். ஆர்3/59200/164/1/92, நாள்: 4-9-1992.)

இந்த சந்திப்பில் நிரந்தர குடை அமைத்து போக்குவரத்து ஒழுங்கு செய்ய தனியார் நிறுவனத்தை அணுகி தங்களுடைய விருப்பத்தின் பேரில் குடை அமைத்துத் தரும்படி கேட்டதில் இந்த இடத்தில் குடை அமைக்கவரும் முன்வரவில்லை, ஆகவே மூன்று தனியார் நிறுவனங்களை அணுகி மதிப்பீடுகள் கேட்கப்பட்டுள்ளது, விரைவில் மதிப்பீட்டுப்பெற்று அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற்று குடை அமைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆர், 3/69504/214/92, நாள்: 8-10-1992, ஆய்வாளர். தெற்கு வாசல் போக்குவரத்து வட்டம், மதுரை மாநகர்.)

வரிசை எண்,	மனு எண்,	மனுதாரரின் பெயரும், முகவரியும்,	மனுவின் சுருக்கம்,
(1)	(2)	(3)	(4)
25	3642	தலைவர், வழக்குரைஞர் சங்கம், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்,	மதுரை உரிமையியல் நீதிமன்றம் உசிலம்பட்டியில் அமைப்பது குறித்து.
		துறையின் பதிலுரை,	குழுவின் பரிந்துரை,
		(5)	(6)
		மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் ஓர் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து கருத்துரு உயர்நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ளது.	

(அ. சா. கு. எண். 122241/நீ.ம. 3/92-2, உள்துறை, நாள் : 27-8-1992.)

வரிசை எண்,	மனு எண்,	மனுதாரரின் பெயரும், முகவரியும்,	மனுவின் சுருக்கம்,
(1)	(2)	(3)	(4)
26	3384	திரு. மு. ப. இராஜேந்திரன், செயலர், கிராமக் கமிட்டி (நாட்டாண்மைக்காரர் இல்லம்), மேலமலை, போடி நாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி, உத்தமபாளையம் தாலுகா, மதுரை ஜில்லா,	மேலமலைக் கிராமத்தில் மருத்துவமனை இருக்கும் மிகச் சிறிய இடமாக இருப்பதால் கிராமத்தின் சார்பாக கொடுக்கப்பட்ட இடத்தில் மருத்துவமனை கட்டிட கோரியது சம்மந்தமாக,

துறையின் பதிலுரை.

(5)

இதன் தொடர்பாக ஏற்கெனவே சிலமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டிடம் கட்டுவதற்கான கருத்துரு இயக்குநர் ஆ.சு.நி. சென்னை-6 அவர்களது ந.க. எண். 9363 அ1/88, நாள் : 18-7-1990-ன் படி அனுப்பி வைக்கிறேன் என்பதை கவிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மற்றொரு கருத்துரு சிலமலை இராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக கட்டிடம் பணித் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கான கருத்துரு இவ்வலுவலக ந. க. எண் 7495/92, நாள் 13-6-1992-ன் மூலம் ஏற்கெனவே டிவிப் திட்ட அலுவலர், சென்னை அவர்களுக்கு இது சம்பந்தமான குறிப்பு டிவிப் திட்ட அலுவலரின் நே. மு. க. எண். 4763/ஹெல்த், 90, நாள், 12-8-1991-ன் மூலம் நடவடிக்கையில் உள்ளது.

(அணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், பெரியகுளம், கடித எண் 9963-அ 6/88, நாள்/ 28-8-1992.)

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப் பெறுகிறது.

24

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
27	3626	திரு. எம். என். ராம்தாஸ் மூர்த்தி, த/பெ. எம். எஸ். நன்னய்யர், 18ஜி, ராஜன் தெரு, வில்லாபுரம், மதுரை.	வில்லாபுரம் பகுதியில் உள்ள ராஜன் தெருவில் பாதாள சாக்கடை வசதி செய்தல் சம்பந்தமாக.

துறையின் பதிலுரை.

(5)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ராஜன் தெருவில் பாதாளச் சாக்கடை வசதி செய்ய மதிப்பீடு எம். 3, ம. எண். 290, 92--93-ல் ரூ 23,900-க்கு தயாரித்து விரைவில் வேலை செய்யப்பட உள்ளது.

(மதுரை மாநகராட்சி ஆணையாளர், மதுரை, கடித எண் இ9/84310/92, நாள், 27-8-1992.)

குழுவின் பரிந்துரை.

(6)

இப்பணியை இரண்டு மாதத்தில் முடித்துவிட்டு குழுவிற்கு அறிக்கை அனுப்புவதாக மதுரை மாநகராட்சி ஆணையாளர் கூறியதை குழு ஏற்றுக் கொள்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
28	3665	திரு. ஜே. ஜேக்கப், தேசிக விநாயகர் கோவில் தெரு இளைஞர் அன்புக்குழு, 27, தேசிக விநாயகர் கோவில் தெரு, மதுரை-7.	தேசிக விநாயகர் கோவில் தெருவில் சாக்கடை வசதி செய்து கொடுப்பது சம்பந்தமாக.

துறையின் பதிலுரை.

குழுவின் பரிந்துரை.

(5)

(6)

தேசிகவிநாயகர் கோவில்தெரு, பொறியாளர் (கு.மற்றும்வ.) அவர்களால் பார்வையிடப்பட்டு மேற்படி தெருவில் திறவை சாக்கடை இல்லாததால் கழிநீர் சாலையில் தேங்குகின்றது. எனவே தேசிக விநாயகர் கோவில் தெருவில் திறவை சாக்கடை இணைப்பதற்கு மதிப்பீடு ரூ.44,100-க்கு தயாரித்து உரிய ஒப்புதல்பெற நடவடிக்கையில் உள்ளது. மதிப்பீடு ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளி கோரி விரைவில் பணி துவங்கப்படும்.

(ஆணையாளர் மதுரை மாநகராட்சி, மதுரை கடித எண் இ4/84310/92, நாள்: 27-8-1992).

இப்பணியை இரண்டு மாதத்தில் முடித்து விடலாம் என மதுரை மாநகராட்சி ஆணையர் கூறியதை குழு ஏற்றுக் கொள்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
29	3105	திரு. ஆர். எல். ராஜு, டாக்டர் புரட்சித் தலைவி பேரவை 7, வைகை வடகரை, ஆழ்வார்புரம், மதுரை-2.	மதுரை புதிய 10-வது வட்டம் வைகை வடகரைப் பகுதியில் ஆண், பெண்களுக்கு மலப்பிறைகள் கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை.

குழுவின் பரிந்துரை.

(5)

(6)

வைகை வடகரை 10-வது வார்டில் 3 ஆண்கள் மற்றும் 5 பெண்கள் கழிப்பறைகள் உள்ளன. ஆழ்வார்புரம் மெயின் சாலையில் (5,6 இருக்கை) 2 பெண்கள் மற்றும் ஒரு ஆண் கழிப்பறை (4 இருக்கைகள்) உள்ளன. மேலும் புதிதாக கழிப்பறைகள் கட்ட இடவசதி இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஆணையாளர் மதுரை மாநகராட்சி, மதுரை கடித எண் இ4/84310/91, நாள்: 27-8-1992).

இருக்கும் கழிப்பறைகளுக்கு தண்ணீர் வசதி செய்து தர ரூ. 10,000-த்திற்கு மதிப்பீடு போடப்பட்டுள்ளது என்றும், ஒன்றரை மாதத்தில் முடிக்கப்பட்டு விடும் என மாநகராட்சி ஆணையர் தெரிவித்ததை குழு ஏற்றுக் கொள்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
30	3661	திரு. பி. ராதாகிருஷ்ணன், 3ஜி, பழைய புஞ்சை மேட்டுத் தெரு, தெற்கு வாசல், மதுரை-1.	பழைய புஞ்சை மேட்டுத் தெரு செட்டியூரணி சந்து, சந்திக்கு மிடத்தில் உள்ள கழிப்பறை, குளியலறைகள் அகற்று தல் சம்மந்தமாக.

துறையின் பதிலுரை.

(5)

மேற்கண்ட கழிப்பறையை மாமன்றத்தின் ஒப்புதலோடு இடித்து அப்புறப்படுத்த இம்மாதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படு கின்றது.

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப் பெறுகிறது.

(ஆணையாளர் மதுரை மாநகராட்சி, மதுரை கடித எண் இ4/84310/92, நாள்: 27-8-1992).

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
31	3100	திரு. கே. சங்கையா, 94, கனகவேல் காலனி, மனை வாடகை குடியிருப்போர் சங்கம், மதுரை-1.	குடியிருப்பு பகுதியில் மர அறுவை தொழிற்சாலை நடத்து வதால் ஏற்படும் நில அதிர்வு மற்றும் மரத்தூசியால் சுற்றுப்புற சுகாதாரக்கேடு, உயிர் சுகாதாரக்கேடு விளைவது சம்பந்தமாக.

துறையின் பதிலுரை.

(5)

நகரம் பகுதியில் ஏழு தொழில் இனங்கள் முறையே கதவு எண்கள் 2/28, 2/39, 2/32, 2/39, 2-40, 2-41-ல் இயங்கி வருகின்றன. இவை குடியிருப்புப் பகுதியிலிருந்து விலக்கப்பட்ட பகுதியில் (excl der area) பகுதி யில் அமைந்துள்ளன. அங்கு இயந்திரங்கள் காலை 5-30 மணி முதல் இரவு 9-30 மணி முடிய ஒட்ட அனுமதிக்கப் பட்டுள்ளது. அவைகள் இரவில் குறித்த நேரத்திற்குப் பின் ஒட்டப்படுகிறதா? என வட்டத்துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களால் கண்காணிக்கப் பட்டது. இரவு 9-30 மணிக்கு மேல் ஒடவில்லை என கண்டறியப்பட்டது. கதவு எண்கள் 2/42, 2/51 பகுதி களில் கனகவேல் காலனியர் வசித்து வருகிறார்கள். அவர் களின் புகாரின் பேரில் தூசு வருவதை நிறுத்தச் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரம் தெரிவிக்கப் படுகின்றது.

குழுவின் பரிந்துரை.

(6)

இரவு நேரங்களில் ஒடினால், ஷோகாஸ் நோட்டீஸ் கொடுத்து நடவடிக்கை எடுத்து லைசென்சை ரத்து செய்யுமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு குழு கருத்து தெரிவித்ததற்கு அவரும் அதற்கு ஒப்புக் கொண்டார். துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப் பெறுகிறது.

(ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மதுரை கடித எண் இ4/84310/92, நாள்: 27-8-1992).

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
32	3444	திரு. ம. ஜேதாஸ், 146-பி, தாசில்தார் தெரு, கிழ வைத்தியநாதபுரம், தத்தனேரி, மதுரை-18.	சாலைகள்—மதுரை மாநகராட்சி வார்டு-1 தத்தனேரி, கிழ வைத்தியநாதபுரம் பகுதி தாசில்தார் தெரு, மருது பாண்டியர் தெரு, அன்னைதெரசா தெரு இவைகளின் தென்புறத்திலும் தேவி சாயப்பட்டரை பிளாட் களுக்கும் ஊடே முள்வேலிகள் அமைத்து அடைப்பு—அடைப்பை அகற்றக்கோருதல்—மதுரை மாநகராட்சியால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை காலதாமதப் பட்டுக் கொண்டு வருதல் சம்மந்தமாக.

துறையின் பதிலுரை.

(5)

மனுவில் குறிப்பிட்டுள்ள சாயப்பட்டரை தனியாருடைய இடமாகும். எனவே மாநகராட்சியால் சாலை அமைக்க இயலாது.

(ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மதுரை கடித எண். இ4/84309/92, நாள்: 27-8-1992.)

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப் பெறுகிறது.

27

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
33	3631	திரு. வீ. பாலகிருட்ணன், 37, தெற்குவெளி வீதி, மதுரை-1.	மதுரை மாநகராட்சி—சுகாதார நிர்வாகம்—மதுரையிலுள்ள தெருக்கள் வீதிகள், சந்துகள், ஆகியவற்றில் குப்பைகள் கொட்டுவதற்கு ''குப்பைத் தொட்டிகள்'' வைக்கக் கோருதல்—மணி அடிக்கும் குப்பை லாரி வண்டியை பயன்படுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் தெருக்களில் சேரும் குப்பைகளைத் தொட்டிகளில் போட பொது மக்களுக்கு வசதியாக குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. மேலும், புதியதாக 300 குப்பைத் தொட்டிகள் வாங்கி முக்கியப் பகுதிகளில் வைக்கப்படும். குப்பை அகற்றும் வண்டிகள் போதுமானதாக இல்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகின்றன. நிதிநிலை மேம்பாடு ஏற்படும் அடைந்தவுடன் புதிய குப்பை வண்டிகள் வாங்கப்படும்.

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை ஏற்றுக் கொள்ளப்பெறுகிறது.

(ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மதுரை, கடித எண். இ4/84683/92, நாள் 27—8—1992).

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
34	3603	திரு. பி. மணிமாறன், துணைச் செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி பேரவை மீனாம்பாள்புரம், மதுரை.	சத்தியமூர்த்தி 5-வது தெருவில் சுமார் 450 குடும்பங்கள் வாழ்கின்றன. இத்தெருவில் குடிநீர் குடிநீர் கிடையாது. நல்ல தண்ணீரும் ஒருநாள் விட்டு ஒரு நாள் வருகிறது. அதுவும் தெருக் குழாய்களில் சரிவர கிடைப்பதில்லை.

துறையின் பதிலுரை.

(5)

சத்தியமூர்த்தி 5-வது தெருவில் மேற்குப் பகுதியில் 6'' விட்டமுள்ள மார்க் 2 அடிபம்புகள் 2 எண்கள் உபயோகத்தில் உள்ளது. மேற்படுதியும், சத்தியமூர்த்தி தெரு சந்திப்பிலிருந்து 29 மீட்டர் தூரத்தில் வடக்குப் பக்கம் 6'' விட்டமுள்ள மார்க் 2 பம்பு அமைத்து உபயோகத்தில் உள்ளது. இன்றைய நீர் விநியோகத்திற்கு சத்தியமூர்த்தி 5வது தெரு மத்தியில் 4 விட்டம் உள்ள புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து அடி பம்பு அமைக்கத் தேவையான மதிப்பீடு ரூ. 25,000 தயாரித்து உரிய ஒப்புதல் பெற வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் குடிநீர் குழாய்கள் 6 எண்கள் உள்ளது. தற்போது குடிநீர் விநியோகம் குறித்த நேரத்தில் ஒருநாள் விட்டு ஒருநாள் எல்லாப் பகுதியிலும் செய்வதுபோல், இந்தத் தெருவிலும் செய்யப்பட்டு வருகிறது.

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை ஏற்றுக்கொள்ளப்பெறுகிறது.

(ஆணையாளர், மதுரை மாநகராட்சி, மதுரை. கடித எண். இ4/84310/92, நாள் 27—8—1992).

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
35	3106	திரு. எஸ். ரத்தினசாமி, செயலாளர், விவசாயிகள் சங்கம், 12/2, ஓசாநாம் தெரு, இராயப்பன்பட்டி, மதுரை மாவட்டம்.	நில ஆர்ஜிதப் பணியின் சுணக்கத்தினால் சண்முகா நதி நீர்த்தேக்கத் திட்டம் காலதாமதமாவது குறித்து மதுரை மாவட்டம், உத்தமபாளையம் (வட்டம்), காமயகவுண்டன்பட்டி கிராமம், புல எண்கள் 1109, 1110, 1111, 1112-ல் உள்ள நிலங்களை நில ஆர்ஜித தனி வட்டாட்சியர், உத்தமபாளையம் அவர்கள் பொதுப் பணித்துறையிடம் விரைவில் ஒப்படைத்து திட்டப் பணியினைத்துவங்க கேட்டது குறித்து.

துறையின் பதிலுரை.

(5)

மனுவில் குறிப்பிட்ட நிலங்கள் ஆர்ஜிதம் செய்ய நில எடுப்பு தனி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப் பட்டு அதற்கான திருநிய விலை மதிப்பீடு நில நிர்வாக ஆணையரிடமிருந்து தற்போது அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மிக விரைவில் இத்துறை வசம் ஒப்படைக்க உறுதியளிக்கப்பட்டுள்ளது. மண் அணை கட்டும் பகுதியில் உள்ள மரங்களை அப்புறப்படுத்த அனுமதி வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் விரைவில் அனுமதி வழங்க உறுதி அளித்துள்ளார். இதற்கிடையில் மண் அணை கட்டும் பணிக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. வழிந்தோடி கட்டும் மற்றும் வாய்க்கால் அமைக்கும் பணிக்கான மதிப்பீடுகள் (பகுதி) தயாரித்து தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுக்கு அனுப்பப் பட்டுள்ளது. மேலும், இத்திட்ட மதிப்பீட்டை 1992—93 ஆம் வருட விலை விபர பட்டியலுக்கு 1,320 லட்சமாக திருத்தப்பட்டு மீண்டும் அரசின் ஒப்புதல் பெறவேண்டி தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நிலங்கள் இத்துறைவசம் ஒப்படைத்து மரங்கள் வெட்ட அனுமதி வழங்கியவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மண் அணை கட்டும் மற்றும் வழிந்தோடி கட்டும் பணிகள் துவங்கப்படும். மேலும், வாய்க்கால் வெட்டும் பகுதியில் மீதமுள்ள 108.21 ஏக்கர் நிலத்தினை இத்துறை வசம் ஒப்படைத்தவுடன் வாய்க்கால் வெட்டும் பணிகளும் துவங்கப்படும்.

(கண்காணிப்புப் பொறியாளர் பொ.ப.து. பெரியாறு அணை தனி வட்டம், மதுரை-2 கடித எண் 160 பிற/கோ. 105/உ.பொ. 2/ நாள், 9—9—1992).

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது.

வரிசை எண்	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	3548	திரு. டி. திருஷ்ணமூர்த்தி, குராயூர்.	மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுக்காவில் உள்ள குராயூர் பெரிய கண்மாயினை சீரமைத்துத் தருமாறும் வரத்து வாய்க்காலில் ஆக்கிரமிப்பு அகற்றுமாறும், பாசன வாய்க்கால்களில் உள்ள கட்டிடங்களை பழுது பார்க்குமாறும், கண்மாயினை தூர் எடுத்து ஆழப் படுத்துமாறும், கண்மாய் சீரமைப்பினை உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளது பற்றி.

துறையின் பதிலுரை:

(5)

உலக வங்கி உதவியுடன் தற்போது எந்த திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. இக்கண் மாயின் ஆயக்கட்டு 200 ஹெக்டேருக்கு மேல் உள்ளதால் இதனை ஐரோப்பிய பொருளாதார குழு நிதி உதவியுடன் நவீனப்படுத்த இயலாது. கண்மாய் மற்றும் வாய்க் கால்கள் ஜரமைப்புப் பணிகளை விரைவுபடுத்தப் பட்ட சிறுபாசனத் திட்டம் அல்லது மராமத்து மற்றும் பழுது பார்த்தல் தலைப்புகளின் கீழ் நடவடிக்கை எடுத்திடவும், ஆய்ந்து கருத்துரு அனுப்பி மாறும் கண்காணிப்புப் பொறியாளர், மதுரை வட்டம் அவர்களுக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளது. குராயூர் கண்மாயினை தூர் வாரி நில மீட்பு திட்டம் கீழ் எடுத்து தூர் வாரி ஆழப்படுத்த ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறு தலைமைப் பொறியாளர், திட்டம் மற்றும் வடிவமைப்பு அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. மனுதாரருக்கும் நேரிடையாக வரப் பெற்ற இதே மனு குறித்து இவ்வலுவலக கடித எண் எஸ். 1/148904/92-3, நாள் : 29—7—1992 மூலம் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

[தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) சென்னை-5, கடித எண். எஸ். 1/19904/92, நாள் : 27—8—1992.]

குழுவின் பரிந்துரை.

(6)

மனுதாரர் வரவில்லை. துறையின் பதிலுரை பதிவு செய்யப் பெறுகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம்: (4)
37	3599	திரு. வி. சங்கரமூர்த்தி, பி.ஏ.,பி.எல்., தலைவர், கேசவ புரம் கண்மாய் மராமத்து சங்கம், காமய கவுண்டன் பட்டு, உத்தமபாளையம் வட்டம், மதுரை மாவட்டம்.	கூத்தநாச்சியார் அணை வாய்க்காலிலும் கேசவபுரம் கண்மாயிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், கூத்தநாச்சியார் அணை வாய்க்காலை தூர் எடுத்தல், கேசவபுரம் கண்மாயை மராமத்து செய்ய வேண்டும் சம்பந்தமாக.

துறையின் பதிலுரை.

(5)

கேசவபுரம் கண்மாயை மராமத்து செய்ய சுமார் ரூ. 80,000-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு நிதி வசதியின் மையால் வேலையை ஆரம்பிக்க இயலாமல் உள்ளது. நிதி நிலையைப் பொறுத்து விரைவில் வேலை தொடங்கப் படும். கூத்தநாச்சியார் அணை வாய்க்கால் தூர் எடுப் பதற்கு மதிப்பீடு தயாரிக்க அளவுகள் எடுக்கப்பட் டுள்ளன. அதற்கும் மதிப்பீடு தயாரித்து நிதிநிலையைப் பொறுத்து விரைவில் வேலையைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்பாளர் களின் விவரங்களைப் பெற்று விதிமுறைகளுக்குத் தக்கவாறு நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டு கண்மாயிலும், வாய்க்கால்களிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற பெரியகுளம் உபகோட்ட உதவிச் செயற் பொறியாளர் அவர்களால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[செயற் பொறியாளர் (பொ.ப.து.) பெரிய குளம் கோட்டம், பெரியகுளம், கடித எண். உ.பொ. (தொ.) 15/எம்./700-எம்/92, நாள் : 8—10—1992].

குழுவின் பரிந்துரை.

(6)

ஆக்கிரமிப்புகள் ஒரு மாதத்தில் அகற்றப்படும் என பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கூறியதை குழு ஏற்றுக்கொண்டு அவ்வாறே பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
38	3551	திரு. பி. எம். சேதுராமலிங்கம், 123, சேதுராமலிங்க பவனம், அழகர் கோவில் சாலை, தல்லாகுளம், மதுரை-2.	மதுரை வடக்கு வட்டம், குலமங்கலம் கண்மாய் உள் வாயிலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரியது.

துறையின் பதிலுரை.

(5)

கடந்த 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் குலமங்கலம் கண்மாயின் நீர்ப்பிடிப்புப் பரப்பில் உள்ள ஆக்கிரமிப்புகள் யாவும் வருவாய்த் துறையினரின் ஒத்துழைப்புடன் அகற்றப்பட்டுவிட்டன. நீர்ப்பிடிப் பரப்பில் எல்லைக் கற்கள் ஊன்றப்பட்டும் உள்ளன. மேற்படி பரப்பிற்குள் உள்ள தென்னை மரங்களுக்கு எண்கள் இடப்பட்டுள்ளன. இவைகளை இத்துறையின் கணக்கில் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீண்டும் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் தெரியப்படுத்தி உள்ளார். ஏற்கெனவே இதே மனுதாரர் கொடுத்த விண்ணப்பத்தின் பேரில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, எல்லைக் கற்கள் நடப்பட்டன. பின்னர் கண்மாயின் ஆயக்கட்டுதாரர்கள் அங்கேயே எப்போதும் இருப்பவர்கள் என்ற முறையில் தங்களது சங்கம் மூலமாக ஆட்களை நியமித்து இதனைத் தடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல் கிராம ஒற்றுமை கெட்டுவிடும் எனக் காரணம் கூறியிருப்பதிலிருந்து அவரது கிராமத்தினரே தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது. எனவே கிராமத்தினர் ஒன்றுபட்டு செயல்பட்டால் ஒழிய எத்தனை முறை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டாலும் மீண்டும் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்பட வழி இருக்கிறது. எனவே, இக்கண்மாய்க்கென்று ஒரு பாசனதாரர்கள் சங்கத்தை ஏற்படுத்தி அதன் மூலம் மட்டுமே மறுபடியும் ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் தடுக்க இயலுமெனவும் அதற்கான நடவடிக்கையினை மனுதாரர் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது. கண்மாயில் உள்வாயிலில் (நீர்ப்பிடிப்பரப்பின்) கிணறுகள் ஏதும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

செயற்பொறியாளர் (பொ. ப.து.) பெரியாறு வைகைத் கோட்டம், மதுரை-2, கடித எண். 348 எம்./92/வ2/கோ. 16, நாள் : 14—9—1992.]

குழுவின் பரிந்துரை.

(6)

1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ஆம் தேதிக்குள் மாவட்ட வருவாய் அலுவலரும், பொதுப்பணித்துறை செயற்பொறியாளரும் நேரில் மேற்படி இடத்தைப் பார்வையிட்டு, குழுவிற்கு அறிக்கை அனுப்புவார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியதை குழு ஏற்று அவ்வாறே பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
39	3360	திரு. பி. நாகைசாமி, தலைவர் நடுப்புரவு விவசாயிகள் சங்கம், 25, அரண்மனைத் தெரு, வடகரை, பெரியகுளம்.	பெரியகுளம், வடகரை கிராமம், அழகுப்பாறை அணையில் மராமத்து செய்யவும், அழகுபாறை அணை வாய்க்காலில் செடிகொடிகளை வெட்டி மண்வேலை செய்யவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

(5) (6)

அழகுபாறையில் மராமத்து செய்யவும், அழகுபாறை அணை வாய்க்கால் செடிகொடிகள் வெட்டி மண் வேலைகள் செய்யவும், தேவையான மதிப்பீடுகள் தயாரிப்பில் உள்ளது. நிதி வசதியைப் பொறுத்து கூடியவிரைவில் மேற்கூறிய வேலைகளை எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகளை அகற்றுவது சம்பந்தமாக வருவாய்த் துறையினரின் உதவியுடன் நில அளவுகள் சரிபார்த்து ஆக்கிரமிப்பாளர்களின்விவரங்கள் கண்டு அரசு விதிமுறைகளின்படி ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து வருவாய்த்துறை மற்றும் காவல்துறையினரின் ஒத்துழைப்புடன் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் பெரியகுளம் உபகோட்ட உதவிச் செயற் பொறியாளர் அவர்களால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[செயற்பொறியாளர் (பொ.ப.து.), பெரியகுளம் கோட்டம், பெரியகுளம்.]

ஆக்கிரமிப்பை அகற்ற தொடர் நடவடிக்கை எடுத்தும், 1993 மார்ச் மாதத்தில் குழுவிற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படும் என நிர்வாகப் பொறியாளர் கூறியதை குழு ஏற்றுக்கொள்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
40	3015	திரு. அ. சடகோபன், தலைவர் ராமிநாயக்கன் குளம், ஆயக்கட்டு விவசாயிகள் சங்கம், வடகரை, பெரியகுளம்-626 501.	பெரியகுளம் வட்டம், வடகரைப் பகுதியில் அமைந்துள்ள ராமி நாயக்கன் குளம் கண்மாயின் வரத்து வாய்க்காலில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அகற்றித் தர நடவடிக்கை எடுத்தல்.

(5) (6)

பெரியகுளம் வட்டம், வடகரை கிராமத்திலிருக்கும், இராமநாயக்கன் கண்மாய் பொதுப்பணித் துறையின் பொறுப்பிலிருக்கும் கண்மாய் ஆகும். இந்தக் கண்மாயின் உள்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும், தண்ணீர் வரத்துக் கால்வாயிலும் அதிக அளவிற்கு ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. ஆக்கிரமிப்பாளர்களின் பட்டியல் வருவாய்த் துறையினரிடம் பெறப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் சம்பந்தமாக அரசு விதிகளின்படி நோட்டீஸ்கள் கொடுத்து வருவாய் துறையினர் மற்றும் காவல்துறையினரின் ஒத்துழைப்புடன் பெரியகுளம் உபகோட்ட உதவி செயற் பொறியாளரால் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[செயற்பொறியாளர் (பொ.ப.து.), பெரியகுளம் கோட்டம், பெரிய குளம்.]

ஆக்கிரமிப்பை அகற்ற தொடர் நடவடிக்கை எடுத்து, 1993மார்ச் மாதத்தில் குழுவிற்கு அறிக்கை அனுப்பி வைக்கப்படும் என நிர்வாகப் பொறியாளர் கூறியதை குழு ஏற்றுக்கொள்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
41	3644	திரு. ரா. தமிழ்செல்வன், செயலாளர், தாழ்த்தப்பட்டோர் விவசாயிகள் முன்னேற்ற சங்கம், ஏழுமலை நாயக்கன் பட்டி, பெரியகுளம் வட்டம்.	மஞ்சளாறு பிரதான வாய்க்காலின் 13வது மடை பாசன பகுதிகளுக்குச் செல்லும் வாய்க்கால் கரையை சீரமைத்து உடைந்துள்ள மடைகளை சரி செய்து, தண்ணீர் சரிவர பாய தக்க ஏற்பாடுகள் செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை.

குழுவின் பரிந்துரை.

(5)

மஞ்சளாறு அணை பிரதான வாய்க்காலில் 13வது மடையின் கீழ் பாசனம் பெறும் ஆயக்கட்டு 780 ஏக்கர்கள் ஆகும். 13-வது மடையிலிருந்து நிலங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பகிர்மான வாய்க்கால் மற்றும் கொப்பு வாய்க்கால்கள் சில இடங்களில் உடைந்தும் சிரமைக்கப் பட வேண்டியுள்ளது. இவ்வாய்க்கால்கள் வெட்டப் பட்டு சுமார் 25 வருடங்கள் ஆகின்றன. போதிய நிதி வசதி இல்லாததால் செப்பனிடும் பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. தக்க நிதி வசதி ஒதுக்கப்படும் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

[செயற்பொறியாளர் (பொ.ப.து.) பெரியகுளம் கோட்டம்].

(6)

துறையின் பதிலுரை ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது.

33

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
42	3340	திரு. செல்லமுத்து தேவர், பொதுஜன ஊழியர், த/பெ. செல்லமுத்து தேவர், டி. கிருஷ்ணாபுரம்-ஏழுமலை வழி, உசிலம்பட்டி வட்டம் மதுரை மாவட்டம்.	மதுரை மாவட்டம்—உசிலம்பட்டி வட்டம்—தேராப்பாறை நீர்த்தேக்கம் கட்டித்தரக் கோருதல் தொடர்பாக.

துறையின் பதிலுரை.

குழுவின் பதிலுரை.

(5)

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம் தேராப்பாறை அணைக்கட்டு நிட்டத்திற்காகன விரிவான மதிப்பீடு ரூ.1,198 லட்சங்களுக்கு (1990–91) விலை விபரப்படி தயாரித்து தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) சென்னை அவர்கள் கடித எண். பி1/2508/86-55, நாள் 29—11—1991 என்பதில் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் (24.88 ஏக்கர்) வனத்துறை நிலத்திற்கு ஈடாக இரு மடங்கு தீர்வை ஏற்படாத தரிசு நிலம் வனத்துறைக்கு

(6)

கூட்டுப்புலத்தணிக்கை செய்ய செயற்பொறியாளர், கோட்ட வளர்ச்சி அலுவலர் மாவட்ட வன அலுவலருடன் 9—11—1992 அன்று சென்று தணிக்கை செய்து 10 நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்றும் அதனை அவர் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

வழங்குவதற்கு வருவாய்த்துறையினரால் கல்லாத்து கிராமம் புல எண். 152/84ல் 175.25 ஏக்கர் பரப்பில் 50 ஏக்கர் நிலத்தினை தெரிவு செய்து வழங்கும்பொருட்டு கோட்டாட்சியருடன் கூட்டு புலந் தணிக்கை செய்ய மதுரை மாவட்ட ஆட்சியரின் கடித எண். 103659/92, எப். 2, நாள் 20—7—1992ல் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[செயற் பொறியாளர் (பொ.ப.து.) திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு கோட்டம், மதுரை].

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
43	3455	திரு. டி. ஜெயக்குமார், தலைவர் பேனா நண்பர்கள் நற்பணி மன்றம், 114, ஜி. எஸ்.டி. ரோடு, மதுரை, 625005.	மதுரை, திருப்பரங்குன்றம் பேருராட்சி பகுதியான சந்திரபாளையத்தில் கடந்த பல வருடங்களாக 200 குடும்பங்கள் வரை வசிக்கும் பகுதியில் மின் இணைப்பு வழங்கப்படாததன் காரணமாக அப்பகுதி மக்கள் மாலை நேரங்களில் வேலை செய்ய இயலாமை மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளின் இன்னல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோருதல்.

துறையின் பதில்.

(5)

சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவிடம் கோரிக்கை மனுவை வழங்கிய பேனா நண்பர்கள் நற்பணி மன்றம் மனுவில் கட்டியுள்ள முகவரியில் செயல்படவில்லை. இம்முகவரியில் திருசின்னான் என்பவர் குடியிருந்து வருகின்றார். அவரிடம் பெற்ற மடலின் படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தள ஆய்வில் மேற்சுட்டிய மன்றத்தின் தலைவரும் மனுதாரருமான திரு. ஜெயக் குமார் என்பவர் கதவிலக்கம் 119ல் செயல்படும் டயர் வல்கனைசிங் தொழிற்சாலையில் பணிபுரிவது அறிந்து அவரிடம் உசாவியதின் அவர் மனுவில் குறிப்பிட்டுள்ள பகுதியான ஹார்வி பட்டியில் வசிக்க வில்லையெனவும், அப்பகுதியில் சுமார் 10 வீடுகள் இருப்பதாகவும், அவ்வீடு களில் குடியிருப்போரிடமிருந்து மின் இணைப்பு வேண்டி இது நாள் வரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை எனவும் தெரிய வருகின்றது இது பற்றி மன்றத் தலைவரிடம் (மனுதாரரிடம்) பெறப்பட்ட மடலின் படி இணைக்கப்படுகிறது. மேலும் மன்றத் தலைவருக்கு (மனுதாரர்) மீன் இணைப்பு வேண்டி உரிய சான்றுகளுடன் விண்ணப்பிக்குமாறும் மடலின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை.

(6)

கண்காணிப்புப் பொறியாளர் குழுவிற்கு வர முடியாத நிலை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்க வில்லை என்பதால், அதற்கான விளக்கத்தைப் பெற்று குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அதன் நகலை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

(மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், மதுரை-7, மே. போ./மமிபவ/உ.செ.பொ./மே.வி./மதொஅ/கோ/பொது/அ./459/92, நாள் : 21—10—1992).

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
44	3093	திரு. எம். பரமசிவம். 21/115. போஸ் பஜார். போடி நாயக்கனூர்.	சாசை மஞ்சு பகுதியில் தெரு விளக்குகள் வேண்டி.

துறையின் பதிலுரை.
(5)

பார்வை (2) சுட்டிய மடலுடன் இணைத்து அனுப்பப்பட்ட மனு எண். 3093-ன் தொடர்பான அறிக்கையில் தெரிவித்துள்ளபடி அகமலை ஊராட்சி சாசை மஞ்சு 14 தெரு விளக்குகள் அமைப்பதற்கு 1992-93 ஆம் ஆண்டிற்கான சிறப்புத் தன்விறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்குள் (31-3-1993க்குள்) அத்தெருவிளக்குகள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிப்பதோடு இதையே இறுதி அறிக்கையாகக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(மேற்பார்வைப் பொறியாளர். மதுரை மின் பகிர்மான வட்டம். கோ, புதூர். மதுரை-625007. மடல் எண். மே, பொ./மிபவ/உசெபொ மே மற்றும் ம.தொ.அ./கோ, பொது/அ. 1456/92. நாள் 31-10-1992).

குமூவின் பரிந்துரை.
(6)

துறையின் பதிலுரை ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது.

35

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
45	3074	திரு. பி.கே. சுப்பிரமணியன். 15. பகவதிங் காலனி. கைத்தறி நகர். நிலையூர். மதுரை-5.	மதுரை. திருப்பரங்குன்றம் மலைக்குப்பின்புறம் அமைத்துள்ள கைத்தறி நகரில் உள்ள 1,000 வீடுகளுக்கு மேல் நிலை தொட்டி. கட்டி குடிநீர் வசதி செய்து தருவது சம்பந்தமாக.

துறையின் பதிலுரை.
(5)

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நிலையூர் 1 பஞ்சாயத்திற்குட்பட்ட திருப்பரங்குன்றம் மலைக்குப் பின்புறம் அமைந்துள்ள நெசவாளர் காலனியின் (கைத்தறி நகர்) தற்போதைய மக்கட் தொகை 7,000 ஆகும்

இப்பகுதிக்கு குடிநீர் வசதி அமைக்கும் பொருட்டு இந்நிதியாண்டில் குடி நீராதாரங்கள் அமைக்கப்படவுள்ளன மேலும் இப்பகுதிக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்யும் மின்விசை நீரேற்றுத் திட்டம் (Power Pump Scheme) ஒன்று அடுத்த நிதியாண்டில் செயல்படுத்த (1993-94) திட்டமிடப்பட்டுள்ளது.

(நிர்வாகப் பொறியாளர். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கிராமக் குடிநீர் திட்டக் கோட்டம். மதுரை. க. எண். 7039/இலஅ. 3/கமபேம/92. நாள் 25-8-1992).

குமூவின் பரிந்துரை.
(6)

துறையின் பதிலுரை படித்து,பதிவு செய்யப்பெறுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
46	3610	திரு. சு. மணியன். 11/12-74. பாரதி நகர். முதல் தெரு. மதுரை-14.	ஆணையூர் குடிநீர் திட்டத்தில் பாரதி நகர். தொலைபேசி நகர். பேங்க் காலனி. வினைவநாதபுரம் மேற்குப் பகுதி ஆகிய ஊர்களை சேர்த்துக் குடிநீர் வசதி வேண்டல் தொடர்பாக,

துறையின் பதிலுரை.

(5)

ஆணையூர் கிராமப் பேருராட்சிக்கு நிரந்தரக குடிநீர் வழங்குவதற்கு நீர் ஆதாரம் கிணறு தோண்டும் பணி (திறந்த வெளிக் கிணறு) நடைபெற்று வருகிறது. இத் திட்டத்தில் மேற்கண்ட ஊர்களும் சேர்க்கப்பட்ட திட்ட மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. நீராதாரம் கிடைக்கப் பெற்றவுடன் திட்ட மதிப்பீடு வாரிய ஒப்பு தலுக்கு விரைவில் அனுப்பப்படும்.

(நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்ட உருவாக்கப் பிரிவு, மதுரை-2. கடித எண். 7039/இலவி, 3/சமபேசெ/92. நாள் 25-8-1992),

குழுவின் பரிந்துரை.

(6)

விரைவில் முடிக்க ஆவன செய்யப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியதை குழு ஏற்றுக்கொள்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
47	3620	திரு. ஜீ. பி, கிருஷ்ணமூர்த்தி, செயலர், மக்கள் மேம்பாட்டு மன்றம் கூடல் நகர், மதுரை 625 018.	ஆணையூர் குடிநீர் திட்டத்தில் கூடல் நகர் 3 ல் 1 பகுதியைக் கொண்ட சுமார் 200 வீடுகள் கொண்ட 4 தெரு மக்களுக்கு சேர்ந்து குடிநீர் வேண்டல் தொடர்பாக.

துறையின் பதிலுரை.

(5)

ஆணையூர் கிராமப் பேருராட்சிக்காக தற்போதுவடிவமைக்கப் பட்டுள்ள குடிநீர்த் திட்டத்தில், ஏற்கெனவே ஆணையூர் சிலையனேரி பகுதிகளுக்கு கிராம குடிநீர் திட்டத்தின் கீழ் 60,000 லிட்டர்மேல்நிலைத் தொட்டியுடன் கூடியதிட்டம் 1/91.ல் அணுமதி வழங்கப்பட்டு தற்போது திட்டம் செயலாக்கப் பட்டுள்ளதால் அப்பகுதி சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மேற்காணும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கூடல் நகர் (பகுதி) 1988 கணக்கின் படி 143 மக்கள் தொகையும் உச்ச கட்ட மக்கட் தொகை 2021-க்கு 241ஐயும் கொண்டதாகும். இப்பகுதிக்கு ஆணையூர் கிராமப் பேருராட்சிக்கான தற்போது வடி வமைக்கப்பட்டு வரும் குடிநீர் திட்டத்தில் குடிநீர்த்தேவை சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இது ஆணையூர் அருகே அமைந்துள்ளது. கிராம குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஆணையூர் சிலையனேரி பகுதிகளுக்கு தற்போது செயலில் உள்ள திட்டத்திலிருந்து ஊரகப் பேருராட்சியே குழாய் நீட்டிப்பு பணிகளை மேற்கொள்ளலாம்.

(நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திட்ட உருவாக்கக்கோட்டம், மதுரை, கடித எண். 10979/கோ. ஆணையூர்/இவஅ 3/92, நாள் 28-8-92).

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை ஏற்றுக்கொள்ளப் பெறுகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
48	4322	திரு. ஏ. சிவபெருமாள், 4-ம் வகுப்பு, டவுன் துவக்கப்பள்ளி, ஆர்.எம்.எஸ். சாலை, மதுரை-1.	1987 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கையின்படி ஊனமுற்ற மாணவர்களுக்கு அரசு உதவிகள் கல்விச் சலுகை பெறுதல்.

துறையின் பதிலுரை. (5)

ஊனமுற்ற மாணவர்களுக்கு 1987 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையின்படி, விடுதிக் கட்டணம் அளித்தல், புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்கள் வாங்க நிதி உதவி, பிரயாணச்சலுகைக் கட்டணம் அளித்தல் ஆகிய உதவிகள் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

கல்வித் துறையின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இதற்கான நிதியுதவியை சென்னை பள்ளிக் கல்லூரி இயக்குநரகம், மூலம் பெறவேண்டும் என்று தகவல் அறியப்பட்டது. ஊனமுற்ற மாணவர்களுக்கும் அதற்கென உள்ள ஆதார ஆசிரியர்களுக்கு நியமனமும் வழங்கி உதவி செய்ய வேண்டும்.

(மண்டல மறுவாழ்வு அலுவலர், மதுரை, கடித எண் 2961/அ4/92, நாள் 22—10—1992.)

குழுவின் பரிந்துரை. (6)

துறையின் பதிலுரை ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது.

37

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
49	3001	திரு. எஸ். கிருஷ்ணன், மதுரை மாவட்ட சிறு பூ வியாபாரிகள் ஐக்கிய சங்கம், 59, வடக்கு மெயின் ரோடு, திடீர்நகர், மதுரை-1.	பூ வியாபாரத்திற்கு என்று தனியாக மதுரை மாநகராட்சி எல்லையில் சிறு பூ வியாபாரிகள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைத்தல்.

துறையின் பதிலுரை. (5)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத்தின் சட்டம் மற்றும் விதிகளில் வேளாண் விளை பொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைப்பதற்கு வழிவகைகள் உள்ளன. விற்பனைச் சங்கங்களின் துணை விதி 6 (1)-ன்படி. 'எ"

குழுவின் பரிந்துரை. (6)

துறையின் பதிலுரை ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது.

வகுப்பு அங்கத்தினர்கள் மட்டுமே நிர்வாகத்தில் பங்கு கொள்ள முடியும். இலாபத்தில் ஈவுத் தொகை பெற முடியும். சங்கத்தின் தேவைகளைப் பெற முடியும். இணை உறுப்பினர்களாகச் சேரும் பூ வியாபாரிகள் மேற்குறிப்பிட்ட பயன்களைப்பெற இயலாது. பூ உற்பத்தியாளர்கள் மற்றும் பூ வியாபாரிகளை இணைத்து கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைத்தாலும் அது தன்னிறைவுச் சங்கமாக பொருளாதார ரீதியில் நல்ல முறையில் செயல்பட வாய்ப்பு இல்லை. காரணம் பூக்கள் அழியும் தன்மையுடையது. விலையில் ஏற்றத் தாழ்வுகள் தவிர்க்க இயலாது. முன்பு மதுரையில் காய் கறிகள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் வட்டார அளவில் ஆரம்பிக்கப்பட்டது. தன்னிறைவுடன் பொருளாதார ரீதியாக செயல்படாமல் கலைக்கப்பட்டு விட்டது. சிறு பூ வியாபாரிகளுக்கென தேவைப்படும் கடனுதவியை கூட்டுறவு நகர வங்கிகள் மூலம் 'ஏ' வகுப்பு அங்கத்தினர்களாகச் சேர்த்து பயன் பெற இயலும். எனவே, பூ வியாபாரிகளுக்கென தனியே ஒரு கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை என்றும் தமிழ்நாட்டில் இது போன்ற சங்கம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

]மதுரை மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் சடித எண் ந.க. 19630/92, மிச/ நான் 29-8 1992.)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
50	3544	திருமதி வி.ஆர். மீனாட்சி, க/பெ. பி.வி. ரெகுநாதன் 1-2, கருப்பன் செட்டியார் தெரு, காமய கவுண்டன்பட்டி, உத்தமபாளையம் வட்டம், மதுரை மாவட்டம்.	மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் காமய கவுண்டன்பட்டி கிராமம், புல எண். 1372/1, சங்கிலி பூத்துக் கரய மொத்த விஸ்தீரணம் 271.70 ஏக்கரில் ஏற்கனவே திரு. முடுகேசன் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட 10.00 ஏக்கர் நிலம் போக டாக்கியுள்ள இடத்தில் 5.00 ஏக்கர் நிலத்தை பொது ஏலத்தில் விடு மாறு கேட்பு மனு.

துறையின் பதிலுரை.

(5)

மனுதாரர் கோரிக்கைக்கு முன்னதாகவே காமயகவுண்டபட்டி கிராமம், புல எண் 1372/1ல் மேற்கு பக்கத்தில் 3 எக்டேர் பகுதி கல்குவாரியை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட மதுரை மாவட்ட அரசிதழ்நிறைப்பு வெளியீடு எண் 27, நாள் 12-8-1992ன்படி அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் புலத்தில் ஒரு பகுதியை ஏற்கனவே ஏலம் எடுத்துள்ள குத்தகைதாரர் திரு. ஆர். முருகேசன் என்பவர், இந்த ஏலம் நடத்துவதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 12837/92ன்படி தாக்கல் செய்து உள்ளதே ன் பேரில், மேற்படி ஏலத்தை நடத்தலாமென்றும், ஆனால் ஏலத்தை உறுதி செய்வதற்கு குத்தடை விதித்தும் உயர்நீதிமன்றம் ஆணையிட்டு உள்ளது. இருப்பினும் ஏற்கனவே ரிட் மனுதாரர் இப் புலத்தில் ஏலம் எடுத்துள்ள பகுதியான 10.00 ஏக்கர் நிலத்தை அன்னாருக்கு அளந்து அத்துமால் காண்பித்து விட்டு மீதியுள்ள வடமேற்குப் பகுதியில் 3.00.0 எக்டேரை ஏலம் விட்டு ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு உத்தம பாளையம் வட்டாட்சியருக்கு இவ்வலுவலக நக.க. (மப)/1238/91-ல் நாள் 9ஈ9ஈ1992ல் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனடிப்படையில் உத்தமபாளையம் வட்டாட்சியரால் புல எண் 1372/1ல் 3.00 எக்டேர் கல்குவாரிக்கு 9ஈ9ஈ91992 மற்றும் 18-9-1992 ஆகிய நாட்களில் ஏலம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஏலங்களில் மனுதாரர் கலந்து கொள்ளவில்லை. எனவே உத்தமபாளையம் வட்டாட்சியருக்கு இவ்வலுவலக 14--10--93 ஆம் நாளிட்ட கடிதம் மூலம் மறு ஏலம் விடும் தேதிகளை மனுதாரருக்கு முன்னரே தெரிவித்து ஏலத்தை நடத்துமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி 22-10-1992ம் நாளன்று உத்தமபாளையம் வட்டாட்சியர் (பொறுப்பு) ஏலம் நடத்தியுள்ளார். இந்த ஏலத்திலும் மனுதாரர் கலந்து கொள்ளவில்லை. அடுத்து 2-11-1992ம் நாள் ஏலம் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக வட்டாட்சியர் (பொறுப்பு) அறிக்கை செய்துள்ளார்.

(துணை இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத் துறை, மதுரை, கடித எண். (இல்லை.)

குழுவின் பரிந்துரை.

(6)

ஏலம் விடப்படும் குறிப்பிட்ட இடத்திற்கு பதிலாக வேறொடு இடத்தில் ஏலம் எடுத்தவர்கள் கல் எடுக்கிறார்கள் என மனுதாரர் கூறுவது குறித்து மனுதாரருடன் மாவட்ட ஆட்சியர் நேரடியாகப் பார்வையிட்டு அது குறித்த அறிக்கை 15 11 199 க்குள் குழுவிற்கு அனுப்பப்பட்டு விடும் என முடி நம்புகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
51	3606	திரு. ஆர். சந்திரன், சமூக சேவை பணியாளர், வேடர் புளியங்குளம் ஊராட்சி, திருப்பரங்குன்றம் ஒன்றியம்.	வேடர் புளியங்குளத்திலிருந்து காலை 8.15க்கு அண்ணா பேருந்து நிலையத்திற்கும், அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து மாலை 5.00 மணிக்கு வேடர் புளியங்குளத்திற்கும் பேருந்து வசதி கோரப்பட்டுள்ளது.

துறையின் பதிலுரை.

(5)

மதுரை மாநகரில் தற்போது கூடுதல் பேருந்து இயக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். கூடுதல் பேருந்துகள் இயக்க உரிமம் பெற்றவுடன் மேற்படி கோரிக்கையின் பிரகாரம் பேருந்து சேவை செய்து தருகிறோம்.

(நிர்வாக இயக்குநர், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், கடித எண் 1451/அ3, நாள் 28—8—1992.)

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை படித்து பதிவு செய்யப் பெறுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.
(1)	(2)	(3)
52	4299	திரு. ஆர். பி. ரவீந்திரநாத், தலைவர், சுவாமி விவேகானந்தர் மக்கள் நல இயக்கம், சீனிவாச நகர், 6வது குறுக்குத் தெரு, மானுவெல் மில்டன் ஸ்கூல் சமீபம், திருநகர், மதுரை-6.

மனுவின் சுருக்கம்.

(4)

பாண்டியன் போக்குவரத்துக் கழக நகர் பேருந்துகள் ஏ-14,5-வது நிறுத்தத்திலும், பி-14 6வது நிறுத்தத்திலும் நின்று செல்கின்றன. மேற்படி ஏ-14 மற்றும் பி-14 வண்டிகள் 5வது நிறுத்தம் மற்றும் 6வது நிறுத்தம் இரண்டிலும் நிறுத்திச் செல்லது சம்பந்தமாக.

துறையின் பதிலுரை.

(5)

பொதுவாக திருநகர் குடியிருப்புக்குத் தேவைக்கு அதிகமாகவே நேரந்துகள் செலுத்தப்படுகின்றன. திருநகரில் மட்டும் 8 நேரந்து நிறுத்தங்கள் உள்ளன. நகரப் பேருந்து வழித் தடங்கள் சீரமைக்கப்பட்டபோது பல வழித் தடங்களில் பயண நேரம் சரி செய்யப்பட்டு எல்லாம் பேருந்து நிறுத்தங்களிலும் பேருந்துகளை நிறுத்தாமல் மாறி மாறி நின்று செல்லுமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் மேற்படி 8 நிறுத்தங்களும் ஒன்றுக்கொன்று 0.3 கி. மீ. இடைப்பட்ட தூரத்தில் அமைந்துள்ளன. ஆகவே. தேவையான நிறுத்துமிடங்களுக்கு பிரயாணிகள் நடந்து செல்லக் கூடிய தொலைவில் தான் உள்ளது. அது தவிர 14—பி வழித்தடத்தில் ஓடும் பேருந்துகள் எல்லா நகரப் பேருந்து நிறுத்தங்களிலும் நின்று செல்கின்றன. இனிமேல்பேருந்து நிறுத்தங்களுள் அதிகப்படுத்தினால் வழித்தடத்தில் நடைகளுள் குறைக்க நேரிடும்.

(நிர்வாக இயக்குநர், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை,கடித எண். போ.இவி/1477/அ3, நாள் 28—8—1992.)

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதிலுரை ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
		(3)	(4)
53	3662	திரு. ச. சோலைமலை, பத்தி எழுத்தர், போடி அம்மாபட்டி, உத்தமபாளையம் வட்டம் மதுரை மாவட்டம்,	போடியிலிருந்து அம்மாபட்டிக்கு கூடுதல் பேருந்து வசதி செய்து தரக் கோரல். போடி சின்னமனூர் வழி அம்மாபட்டி. கில்லமரத்துப்பட்டி தடத்தில் நகரப் பேருந்து வசதி செய்யக் கோரல்.

துறையின் பதிலுரை

குழுவின் பரிந்துரை

(5)

(6)

இக்கழக நகரப் பேருந்து போடி போடி வழி நாகலாபுரம். பெருமாள் கவுண்டன்பட்டி அம்மாபட்டி திருமலாபுரம் வழித் தடத்தில் கிராம மக்கள் 7 பள்ளி மாணவர்கள் நலன் கருதி மூன்று சுற்றுகள் இயக்கப்படுகிறது. இந்நடைகளில் அம்மாபட்டியிலிருந்து போடிக்கு செல்லும் பள்ளி மாணவர்களுக்கு உகந்தாற்போல் கால அட்டவணை நிர்ணயம் செய்து இயங்கிக் கொண்டிருக்கிறது. போடி -- அம்மாபட்டி தடத்தில் கூடுதல் நடைகளை இயக்கத் தேவையில்லை. நடப்பு நிதியாண்டில் புதிய வழித்தடங்கள் இயக்கப்படுவதற்குரிய பட்ஜெட் முடிவடைந்து விட்டது. வரும் நிதியாண்டில் தாங்கள் கோரிய வழித்தடத்தில் பேருந்து இயக்க மேல் நடவடிக்கை எடுக்கின்றோம்,

நிர்வாக இயக்குநர் கூறியது போல 9-12-1992 முதல் 11.50 மணிக்கு அட்டேருந்து இயங்கி வரும் எனக் குழு நம்புகிறது.

(நிர்வாக இயக்குநர், திராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்.)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
54	3667	திரு. பா. ஜியாஸ்தீன், செயலாளர், காயிதே மில்லத் இளைஞர் நற்பணி மன்றம், களிமங்கலம்-650 020.	மதுரை களிமங்கலம் வழித் தடத்தில் கூடுதலாக இரண்டு நகரப் பேருந்துகள் இயக்கக் கோரப்பட்டுள்ளது.

துறையின் பதிலுரை.

குழுவின் பரிந்துரை.

(5)

(6)

தற்சமயம் களிமங்கலத்திலிருந்து 42-ஏ என்ற தடப்பேருந்து கள் மூலம் தினமும் 32 தனி நடைகள் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகிறது,

நிர்வாக இயக்குநர் கூறியது போல் 1-12-1992 முதல் ஒரு பஸ் கூடுதலாக நகரப் பேருந்து இயங்கி வரும் எனக் குழு நம்புகிறது.

மதுரை மாநகரில் கூடுதல் பேருந்து இயக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம், விரைவில் மேற்படி வழித்தடத்திலும் கூடுதல் பேருந்து வசதி செய்து தருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

நிர்வாக இயக்குநர். பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.
கடித எண், போ.தி.வ./1458/அ3. நாள் 28-8-1992.)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
55	3936	திரு. வி. பாலகிருஷ்ணன், அமுதசுரபி, 37, தெற்கு வெளிவீதி, மதுரை-625 001.	பெண்களின் நலன் கருதி 4-ம் நம்பர் வழித் தடத்தில் காலை நேரங்களிலும் மாலை நேரங்களிலும் பெண்களுக்கென தனிப் பேருந்து விடவேண்டும் என்றும், சப்பாணி கோவில் மற்றும் மாநகராட்சி பேருந்து நிறுத்தத்தில் எல்லா பேருந்துகளும் நின்று செல்ல வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
பெண்களுக்கென தடம் எண். 4-ஐல் பெரியார் பேருந்து நிலையம் - அனுப்பாண்டி வரை காலை 0-40க்கும், அனுப்பாண்டியிலிருந்து மாலை 4-15 மணிக்கு ஒரு பேருந்தும் விடப்படுகிறது. இப்பேருந்தை நிர்மலா பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சௌராஷ்ட்ரா பெண்கள் பள்ளி மற்றும் மாநகராட்சி பெண்கள் பள்ளி மாணவிகள் அனைவரும் பயன்படுத்துகின்றனர். சப்பாணிகோவில் பேருந்து நிறுத்தத்தில் எல்லா நகரப் பேருந்துகளும் நின்று செல்கின்றன. எல்லா பேருந்துகளும் சரிவர நின்று போக ஆய்வாளர்களை வைத்து கண்காணிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (நிர்வாக இயக்குநர், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை, கடித எண். போ.தி.வ.'1456'ஆ5'நாள் 28—8—1992)	மனுதாரர் மதுரை மாநகராட்சி ஊழியர் என்பதால் இம் மனுவை பரிசீலனை செய்ய வேண்டியதில்லை என குழு கருதுகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
56	3656	திரு. வி. ஆர். சுப்பிரமணியன், தலைவர், மகாராஜன் நகர் ஆசிரியர், குடியிருப்பு நகர்ச் சங்கம், வீரகனூர், மதுரை-625 009.	மகாராஜன் நகர் ஆசிரியர் குடியிருப்புக்கென ஒரு பேருந்து நிறுத்தம் கோரியது.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மேற்படி ஆசிரியர் குடியிருப்பு வீரகனூர் வழி பேருந்து நிறுத்தத்திலிருந்து சுமார் 0.6 கி.மீ. தொலைவுதான் உள்ளது. தவிர இக்குடியிருப்புக்குச் செல்லும் வழி தேசிய நெடுஞ்சாலையில் ஒரு வளைவில் அமைந்துள்ளது. இவ்வளைவில் பேருந்து நிறுத்தம் கொடுத்தால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆதலால் பேருந்து நிறுத்தம் தேவையில்லை என்று கருதுகிறோம்.	மாவட்ட ஆட்சியர் கூறியது போல் ப்பாஸ் சாலை இருந்தால் அல்லது கூடியீ, வுரைஇது குறித்து உதவிட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

(நிர்வாக இயக்குநர், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை கடித எண். போ. வ. இ./1460/ஆ3, நாள் 28—8—1992.)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
57	3085	தலைவர் பி.ஜி. பொன்ராஜ், நகர் நலச் சங்கம், முருகமலை நகர், ஏ. புதுக்கோட்டை கிராமம், பெரியகுளம் வட்டம், மதுரை மாவட்டம்.	பெரிய குளத்தில் இருந்து முருகமலை நகருக்கு தற்பொழுது இயங்கும் நடைகள் நீங்கலாக - கூடுதல் பேருந்து வசதி செய்து தரக் கோரல்.
		துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
		பெரியகுளம் - முருகமலைநகர் தடத்தில் தற்பொழுது இயங்கும் நடைகள் நீங்கலாக முருகமலைநகர், ஆரோக்கியமாதா நகர், நேரு நகர் மற்றும் ஏ. புதுக்கோட்டை கிராம பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகள் நலன் கருதி, பயன்பெறும் வகையில் கால அட்டவணை நிர்ணயம் செய்து மனுதாரர் கேட்டுக் கொண்டதின்படி நகரப் பேருந்து தடத்தினை இயங்கிக் கொண்டிருக்கிறது. என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.	துறையின் பதிலுரை ஏற்றுக் கொள்ளப்பெறுகிறது.

(நிர்வாக இயக்குநர், திராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், திண்டுக்கல்.)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
58	3064	திரு. தா. ஜே. அப்பாசாமி, தலைமை ஆசிரியர், அமெரிக்கன் கல்லூரி மேல்நிலைப் பள்ளி, தல்லாகுளம், மதுரை-625 002.	பார்வையற் றோர்க்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் ஊனமுற்ற மாணவர்களுக்கான உதவித் தொகை மற்றும் சிறப்பாசிரியர் பணி நிரந்தரம் சார்பாக.
		துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
		(1) மனுதாரரின் பள்ளியில் 1991-92ல் பயின்ற ஊனமுற்ற மாணவர்களுக்கான உதவித் தொகை வேண்டி இவ் வலுவலகத்திலிருந்து ஸ்ஆர்.சி. எண். 7739/எப்/91/டி.ட்டி.ஈ.ஆர்.ட்.டி., நாள் 25—3—1992ல் தமிழகக் கல்விச் செயலருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. அரசு ஆணை கிடைத்தவுடன் அம்மாணவர்களுக்கான அரசு உதவி கிடைக்கச் செய்யலாம். (2) 1992-93 ஆம் ஆண்டு பயிலும் இயலாநிலை மாணவர்களை விரைவில் மருத்துவ பரிசோதனை செய்து தகுதியுடைய மாணவர்களுக்கு அரசு உதவி கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.	துறையின் பதிலுரை படித்து பதிவு செய்யப் பெறுகிறது.

(3) சிறப்பாசிரியர் நியமனம் பற்றி இவ்வலுவலகத்தி லிருந்து ஆர். சி. எண். 789/ எப்9/1/டி.ட்டி.ஈ.ஆர்.ட்டி., நாள் 26—3—1992ல் தமிழகக் கல்வி செயலருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. அரசு ஆணைக் கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(4) விண்ணப்பதாரர் குறிப்பிடும் நகல் மனுவுடன் இல்லையென்பது தெரிவிக்கப்படுகிறது.

(கடித எண்ணும் தேதியும் 9583/எப்/91/டி..ட்டி.இ.ஆர்.ட்டி., நாள் 15—9—1992.)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
59	3448	பெற்றோர் ஆசிரியர் சங்கம், அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, வாடிப்பட்டி.	டி. வாடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுவது குறித்து.

துறையின் பதிலுரை. (5)

டி.வாடிப்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளிக்கு 10 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 23.20 இலட்சத்திற்கான தோராய மதிப்பீடும், வரைபடங்களும், மதுரை பிறப்புக் கட்டிட வட்டம் பொதுப்பணித்துறை, கண்காணிப்புப் பொறியாளர் மூலமாக கடித எண். 337/ஜி/பொ.2/கோ.870/89, நாள் 18—5—1989ன் படி தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை, அவர்களுக்கு அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது என கண்காணிப்பு பொறியாளர் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் மதுரை முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க. எண். 20386/ஈ5/89, நாள் 26-8-89—இல் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு நடவடிக்கை மேற்கொண்டு, அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்றுத் தருமாறு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது. அரசின் நிர்வாக ஒப்புதல் கிடைக்கப் பெற்ற வுடன் கட்டிடப் பணி நடைபெறும் என தெரிவிக்கப் படுகிறது.

(முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை-2, கடித எண். ந.க. 25789/ஆ3/92.)

குழுவின் பரிந்துரை. (6)

துணை இயக்குநர் கூறியதைப் போல் இந்த ஆண்டு 3 வகுப்பு அறைகள் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலமாக கட்டப்பெறலாம்என குழு பரிந்துரை செய்கிறது

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
60	3597	(1) திரு. பாண்டியராஜன், தலைவர், பெற்றோர் ஆசிரியர் சங்கம், ஏ.வெல்லாளப்பட்டி.	(1) அ.வல்லாளப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் ஆய்வுக்கூடம் இல்லாமையால் 15 கி.மீ. சென்று மேலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆய்வுக்கூடத்தில் ஆய்வு செய்யவேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது. ஆகவே, இப்பள்ளிக்கு ஆய்வுக் கூட வசதி செய்ய வேண்டுதல்.
		(2) திரு. ஒ. அச்சின், தலைவர், கட்டிடக்குழு, அரசு மேல்நிலைப்பள்ளி, ஏ.வெல்லாளப்பட்டி.	

(2) மாணவர் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் (போதுப் பணித்துறையிர 5 வகுப்பறைகள் கொண்ட 2 கட்டிடங்கள் (10 வகுப்பறைகள்) கட்ட ரூ. 10.95 லட்சத்தில் மதிப்பீடு செய்து சேப்பாக்கம், பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) முதன்மைப் பொறியாள ருக்கு 2—12—1986 இல் அனுப்பி வைத்தனர் இக்குழு பலமுறை முயன்றும் கட்டிட அனுமதி கிடைக்கவில்லை ஆகவே கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்ய அனுமதி வேண்டும்.

(3) மார்ச் 1989ல் அடித்த புயலின் சீற்றத்தால் கூரைக் கட்டிடம் முழுவதும் சேதம் அடைந்தது. அக்கட்டிடத்திற்குப் பதிலாக பொதுப்பணித்துறையினரால் சுமார் 1.05 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்து சென்னைக்கு ஒப்புதலுக்காக அனுப்பியது. இதற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. இக்கட்டிடம் கட்ட ஆவன செய்ய வேண்டும்.

(4) இப்பள்ளியின் பி.டி. (B.T.கணக்கு) ஆசிரியர் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அவருக்குப் பதிலாக அறிவியல் ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார். எனவே பி.டி. (கணக்கு)ஆசிரியர் கூடுதலாக நியமிக்க கேட்கப்பட்டுள்ளது.

(5) இப்பள்ளியில் மொத்தம் ஆறு இடைநிலை ஆசிரியர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். தற்போது ஐந்து ஆசிரியராகவே உள்ளனர். இப்பள்ளிக்கு 9 இடைநிலை ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். ஆதலால் கூடுதலாக நான்கு இடைநிலை ஆசிரியர்கள் வேண்டுதல்.

துறையின் பதிலுரை.
(5)

(1) இப்பள்ளி 3—8—1989ல் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. இப்பள்ளிக்கு கானை ஆய்வுக்கூடம் 4—6—1989ல் கட்டி முடிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேல்நிலைப் பள்ளிக் கான ஆய்வுக்கூடம் கட்டுவதும் உபகரணங்கள் வழங்கு வது தொடர்பாக அரசின் நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப் பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீடு பெற்றவுடன் மாணவர் களின் குறை தீர்க்கும் வகையில் ஆய்வகக் கட்டிடம் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

(2) இப்பள்ளிக்கு ஐந்து வகுப்பறைகள் கொண்ட இரு கட்டிடங்கள் (10 வகுப்பறைகள்) கட்டுவதற்கான மதிப்பீடுகள் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறை கடிதம் 20557/டி2/87, நாள் 24—6—1987ன்படி அரசிற்கு பணிந்தனுப்பப்பட்டுள்ளது. அரசின் நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் கிடைக்கப் பெற்றவுடன் இக்கட்டிடப் பணி நடைபெறும் எனத் தெரிவிக்கப்படு கிறது.

(3) ரூ. 1.05 லட்சத்திற்கு மதிப்பீடுள்ள கட்டிடம் கட்டுவது சார்பாக பொதுப்பணித் துறை ஒப்புதல் பெறவில்லை. ஒப்புதல் பெற்று அரசின் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் கட்டிடம் கட்ட ஆவன செய்யப்படும்.

(4) இப்பள்ளியின் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஐந்து பட்டதாரி ஆசிரியர்கள் போதுமானதாகவும், தற்போது நான்கு பட்டதாரி ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள் தவிர மேல்நிலை வகுப்புகளுக்கான வழங்கப்பட்ட ஒரு கணக்கு முதுகலைப் பட்டதாரி ஆசிரியரும் இதர அறிவியல் ஆசிரியர்களும் பணியாற்றுவதால் மேல்நிலை வகுப்பு

குழுத் தலைவரின் முன்மொழிதலையேற்று மாவட்ட ஆட்சியர் கூறியதைப் போல் எழுபத்தைந்து ஆயிரம் ரூபாய் செலவில் இப்பள்ளிக்கு ஒரு வெட் போடுவதற்கு மாவட்ட ஆட்சியர் டிஸ்கிரிசனரி பண்டிலிருந்து கொடுத்து அது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படலாம் என்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கான ஒதுக்கீடு செய்யப்படும் பொழுது இப்பள்ளிக்கு கண்டிப்பாக கொடுக்கப் பெறலாம் என்றும் குழு பரிந்துரை செய் கிறது.

குழுவின் பரிந்துரை.
(6)

கள் போக 9, 10 வகுப்புகளுக்கும் கணக்கு மற்றும் அறிவியல் பாடங்கள் போதிப்பதற்கு பாட வேளைகள் அமைத்து, பாடங்களின் வகுப்புகள் செயல்பட்டு வருகிறது. ஆகவே, கூடுதல் பட்டதாரி ஆசிரியர்கள் (கணக்கு பாடம் உட்பட) தேவையில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

(5) இப்பள்ளியில் ஆறு இடைநிலை ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். மனுதாரரின் கோரிக்கையின்படி கூடுதலாக இடைநிலை ஆசிரியர் நியமனம் அவசியமாகவுள்ளது. ஆசிரியர் ஒதுக்கீடு அரசிடமிருந்து பெறப்படும் எண்ணிக்கையைப் பொறுத்து இப்பள்ளிக்கு கூடுதலாக வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும். இவ்வாண்டு ஆசிரியர் இடஒதுக்கீடு ஏதும் இதுவரை பெறப்படவில்லை.

ஆகவே, இவ்வலுவலகத்தில் ஏதும் நிலுவையில்லையென்றும் அரசிடமிருந்து கட்டிடப் பணிக்கான நிதி ஒதுக்கீடும், இடைநிலை ஆசிரியர்களுக்கான ஒதுக்கீடும் கிடைக்கப் பெற்றவுடன் தாமதமின்றி மனுதாரரின் கோரிக்கையை முழுமையாக நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை, கடித எண். 21234/ஆ3/92.)

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)	துறையின் பதிலுரை. (5)	துறையின் பதிலுரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.
61	3374	செயலாளர், காந்தி-கஸ்தூரிபா நகர் மக்கள் நல மன்றம் (6-வது வட்டம்), மேலூர்.	மேலூர் நகராட்சி கஸ்தூரிபாய் நகர் காலி இடத்தில் குப்பை சேகரித்து வைத்துள்ளதை அப்புறப்படுத்துதல் சம்பந்தமாக.	நகராட்சி கஸ்தூரிபாய் நகர் பெரிய கருப்பன் காலனி காந்திஜி பூங்கா துப்புரவுப் பணியாளர்களின் குடியிருப்பு பகுதியின் பின்புறம் உள்ள குப்பைமேடு கடந்த 10 ஆண்டு களாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அப்பொழுது மேற்படி இடம் பள்ளமாக இருந்ததால் குப்பைகளைக் கொட்டி வந்தனர். நகராட்சியில் குப்பை கொட்டி வரும் இடம் குடியிருப்பு பகுதியில் இருந்து 150 அடி தூரம் அப்பால் உள்ளது. நகராட்சி உரக்கிடங்கு 1-1/2 கி.மீ. தூரம் உள்ளது. நகராட்சி குப்பை வண்டி கள் பட்டா வண்டிகளாக இருந்ததால் நகரின் எல்லை 1/2 கி. மீட்டரில் முடிந்து விடுவதாலும், சரியான பாதை வசதி இல்லாததால், பஞ்சாயத்து பகுதியில் 1 கிலோ மீட்டர் கடக்க வேண்டியது உள்ளது. எனவே, தினசரி கூட்டி சுத்தம் செய்யும் குப்பைகளை அகற்றி உரக் கிடங்கில் போட வசதியில்லாததால், ரோடு மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், குப்பைகளை நகராட்சி பெரிய கருப்பன் காலனியின் அருகில் இருந்த பள்ளத்தில் கொட்டப்பட்டு லாரி மூலம் அள்ளப்படுகிறது. மேலும் கஸ்தூரிபாய் நகருக்கும் தற்பொழுது குப்பை கொட்டப்படுகிற இடத்திற்கும் அதிக இடைவெளி உள்ளது. மனித நடமாட்டம் இல்லாத இடத்தில் குப்பை கொட்டப்படுகிறது. மேலும், மலம் குப்பையோடு சேர்ந்து கொட்டப்படுவதில்லை. தற்போது நவீன கழிப்பறை வசதிகள் முழுமையாக அமுல்படுத்துவதால் மலம் சேகரிக்கும் பணியும் நகராட்சி மூலம் இல்லாதுள்ளது. குப்பை வண்டி மூலம் கொட்டப்படும் குப்பைகள் தவறாமல் தினசரி மாலை சுத்தம் செய்யப்படுகிறது.	

TAMILNADU ARCHIVES

தேங்கியுள்ள குப்பைகள் 1986-ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டு, ஒரு சிறு பகுதி அனுப்பப்பட்டது. அதன்பின் போதுமான வாகன வசதி மற்றும் குப்பைகளை விற்பனை செய்ய போதிய கேட்பு இல்லாததால் குப்பை சரிவர அகற்றப்படவில்லை. நகராட்சி உரக்கிடங்கு 3.34 ஏக்கர் அளவுள்ளதால், நகரில் சேரும் அனைத்து குப்பைகளைக் கொட்டுவதற்கு இடம் போதுமானதாக இல்லாததாலும், தற்காலிக குப்பை கொட்டும்இடமாக பெரியகருப்பன் காலனி பின்புறம் உள்ள இடத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. மேலும், உரம் விற்பனையாகாத தால், உரக்கிடங்கில் தேங்கியுள்ள குப்பைகளுக்கு மேல் கூடுதலாக தினசரியும் சேகரிக்கும் குப்பைகளைப் போட வசதியில்லாமல் இருந்தது.

தற்பொழுது 1990-ஆம் ஆண்டில் மினி லாரி வாங்கப்பட்டு, தினசரி சேரும் குப்பைகள் எடுக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. துப்புரவுப் பணியாளர்கள் நகராட்சியில் 58 பேர் பணிபுரிகின்றனர். இதில் சாக்கடை சுத்தம் செய்யும் பணிகள் தெரு ஓரங்களிலும் உள்ள மலம் சுத்தம் செய்தல், கழிப்பறைகள், சிறுநீர்ப் பிறைகள் ஆகியவற்றிற்கும் பணி யாளர் பகிர்ந்து பணியாற்ற அனுப்புவதால், 5 குப்பை வண்டிகள், ஒரு மினி லாரி, ஒரு டிராக்டர் 9 துப்புரவுப் பணியாளர்களை நியமித்து பணிபுரிய அனுப்பப்படுகிறது. குப்பை வண்டிகள் 1-1/2 கி.மீட்டர் தூரம் சென்று உரக்கிடங்கில் கொட்ட வர இயலாத காரணத்தால் பெரியகருப்பன் காலனி பின்புறம் உள்ள இடத்தில் குப்பைகளை தினசரி போட்ட வேண்டியிருப்பது அவசியமாகிறது. போடும் குப்பைகளை லாரி டிராக்டர் மூலம் தினசரி தவறாமல் சுத்தம் செய்யப்படுகிறது.

தேங்கியுள்ள குப்பைகள் மலம் கலவாத குப்பைகளாக இருப்பதால், எவ்வித பொது சுகாதாரத்திற்கும் இடையூறு இல்லை மேலும் குடியிருப்பு பகுதிக்கு 150 அடி அப்பால் உள்ளது. தற்பொழுது தேங்கியுள்ள குப்பையை யாரும் விலைக்கு வாங்க முன்வராத காரணத்தால் உடனடியாக சுத்தம் செய்ய இயலவில்லை. விரைவில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

(தனி அதிகாரி, மேலூர் நகராட்சி, கடித எண். ந.க. 3607/92/டி.1, நாள் 28—8— 1992.)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்	மனுவின் சுருக்கம்.
	(1)	(2)	(3)	(4)
62	3097	திரு. எம். வீரப்பன் மற்றும் பலர், கஸ்தூரிபாய் நகர் மேலூர்.	மேலூர், கஸ்தூரிபாய் நகர் பகுதியில் 40 அடி. பாதையை நகரமைப்பு திட்டத் தின்படி வரையறுக்கக் கேட்டல்.
		துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
		கஸ்தூரிபாய் நகர் மனுதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் சேனல் ரோட்டையும், காந்திஜி பூங்கா ரோட்டையும் இணைக்கும் 40 அடி சாலையை அமைத்துத் தரும்படியும் ஏற்கெனவே அப்பகுதியில் வீடுகள் கட்டியுள்ளதால் சாலை வசதியின்றி மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரி வித்துள்ளனர். மேற்படி விண்ணப்பத்தில் கையொப்ப மிட்டுள்ள வரிசை எண் 5-ல் கண்டுள்ள திரு. எம். நாட்டாம்பலம் என்பவர் நகராட்சிக்கு எதிராக வழக்கு எண் ஒ.எஸ். எண் 154/92-ல் 4 ஆம் எண் வாதியாவார். மேற்படி வழக்கில் மேற்படி 40 அடி சாலையில் பிரதி வாதிகள் (1) திரு. எம். முத்தலிபு என்பவர் 40 அடி 8 அடி அளவில் ஆக்கிரமிப்பு செய்துள்ள காம்பவுண்டு சுவர், (2) திரு. சங்கர நாராயணன் என்பவர் 30 அடி 13 அடி அளவில் ஆக்கிரமிப்பு செய்திருக்கும் கட்டிட அஸ்திவாரம் மற்றும் 3-ஆம் பிரதிவாதி திரு. கருப்பையா என்பவர் ஆக்கிரமிப்பு செய்யும்படியும் சர்வே எண்கள் இவைகளைக் காலி செய்யும்படியும் 176/5, 176/9-பி, 237-2-ஏ மற்றும் 237/2-பி ஆகியவை	

vasantham

களில் 640 அடி நீளத்திற்குச் செல்லும் 40' சாலையை திட்ட சாலையாக பிரகடனப்படுத்தவும் கோரி மேற்படி வழக்கு மாவட்ட நீதிமன்றம் வேலூரில் வழக்கு எண் ஒ. எஸ். எண் 154/92-ல் நடைபெற்று வருகிறது. மேற் படி வழக்கு விசாரணையில் உள்ளது. இன்னும் முடி வடையவில்லை. மேற்படி வழக்கு முடிவுற்ற பின், மேற் படி சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்தப் பட்டு, மேற்படி தெரு மக்களால் நகராட்சிக்கு 40 அடி சாலை ஒப்படைக்கப்பட்ட பின்னர் தான் மேற்படி திட்ட சாலை அமைக்க இயலும் என்பதைப் பணிவுடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

(தலி அதிகாரி, மேலூர் நகராட்சி, மேலூர், கடித எண். ந.க. பி.3/3598/92, நாள் 2-9-1992.)

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
63	3609	திரு. ஏ. நாகராஜன், 4, கூழையாபுரம் 2-வது தெரு, திருமங்கலம்.	கூழையாபுரம் 2-வது தெருவில் கழிவுநீர் வடிகால் கட்டக் கோருதல்.

துறையின் பதிலுரை.
(5)

குழுவின் பரிந்துரை.
(6)

இந்நகராட்சிக்குட்பட்ட கூழையாபுரம் 2-வது தெருவில் கழிவு நீர் வடிகால் கட்ட 1991-92 நேரு வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ. 20,000-க்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டு, வேலை செய்து முடிக்கப்பட்டு விட்டது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. மனுதாரர் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுவிட்டது.

துறையின் பதிலுரை படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
64	3612	திரு. ப. கோபாலகிருஷ்ணன், 206, பொன்னி தெரு, சேவுகன் செட்டியார் காலனி, ஆத்திகுளம், மதுரை-14.	பொது கூகாதாரம். கழிவு நீர், சாலை வசதி வேண்டல் சேவுகன் செட்டியார் காலனியில் கழிவுநீர் வாய்க்கால் வசதி, சாலை வசதி வேண்டல்.

துறையின் பதிலுரை.
(5)

நாகனாகுளம் ஊராட்சி, ஆத்திகுளம் கிராமம், பொன்னி தெருவில் கழிவுநீர் வாய்க்கால் சிறியதாக உள்ளதால், அதிகமான கழிவுநீர் வெளியேறும் போது கழிவுநீர் சிதறி வீதி வழியாக வருகின்றதைத் தடுக்க தற்பொழுது கழிவு நீர் வாய்க்காலை அகலப்படுத்துவதற்கு பூர்வாங்கமான வேலைகள் நடைபெற்று வருகிறது. சாலை வசதி ஏற் கனவே போதுமான சிறப்புடன் பராமரிக்கப்பட்டு வரு கிறது.

(ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், மதுரை மேற்கு.)

குழுவின் பரிந்துரை.
(6)

மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையர் கூறியது போல, ஒரு மாத காலத்தில் கழிவுநீர் வாய்க்கால் அமைக் கப்பட்டு விடும் என குழு நம்புகிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும், முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
65	3640	பஞ்சாயத்து நிர்வாகிகள் 6, 7, 8-வது வார்டுகள், பட்டாபுளி தெரு, கீழவடகரை, பெரியகுளம்.	பெரியகுளம் டவுன், பி.ஆர்.பி. நாயுடு தெருவில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நகராட்சியின் அனுமதியின்றி ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டி குடியிருந்து வருவதை அப்புறப்படுத்தி, அவ்விடத்தில் 6, 7, 8-வது வார்டு பொதுமக்கள் அனைவருக்கும் குறிப்பாக பெண்களுக்குப் பயன்படும் வகையில் பொது கழிப்பிடம் ஒன்று கட்டித்தர வேண்டி.

துறையின் பதிலுரை.
(5)

சர்வே எண். 4708 மற்றும் 4717-ல் மூக்கன் என்பவர் 17' 20' அளவில் வீடுகட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மேற்படி ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த இவ்வலுவலக ந.க. எண். 5565/92, எண். 1, கோப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920, பிரிவு 182 (1), 313, 338, 339 மற்றும் 340(1)-ன்கீழ் ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்த அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளன. மேற்படி ஆக்கிரமிப்பு போக மீதி உள்ள இடம் 5,480 சதுர அடி இடத்தில் குறைந்த செலவிலான கழிப்பிடம் கட்டும் திட்டத்தின்கீழ் பொது கழிப்பிடம் ஒன்று பெண்களுக்கென கட்ட நகராட்சியினால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தெரு வீலேயே உள்ள பேருந்து நிலைய வளாகத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனி கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

துறையின் பதிலுரை படித்துப் பதிவு செய்யப்பட்டது.

(ஆணையாளர், பெரியகுளம் நகராட்சி கடித எண். 5309/92/சி2/ நாள் 26—10—1992.)

குழுவின் பரிந்துரை.
(6)

செ. சு. ஜானகிராமன்,
செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS